உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-175

மார்ச் 1-15 2024



சிவராத்திரி சிறப்பிதழ்

# மகா சிவராத்திரி தோன்றிய தலம்

e-magazine
e-magazine
e-magazine

e-magazine
aanmeegamalar.com

## சிவனின் குணத்தை குறிக்கும் செற்கள்

சிவ பெருமானை ஈசன், மகேஸ்வரன், ருத்ரன், மகாதேவன், சர்வேஸ்வரன், பரமேஸ்வரன், ஈஸ்வரன் என பல பெயர்களில் அழைக்கிறோம். இவற்றில் பல திருநாமங்களுக்கு என்ன பொருள், ஏன் சிவனை இத் திருநாமத்தால் அழைக்கிறோம் என தெரியாமலேயே வணங்கிவருவோம். ஆனால் இந்த ஒவ்வொரு திருநாமத்திற்கும் ஒவ்வொரு குணம் இருக்கிறது. இந்த ஒவ்வொரு திருநாமமும் சிவனின் பலவிதமான குணங்களை குறிக்கும் சொற்களால் உருவானதாகும்.



## சிவனின் எட்டு திரு நாமங்கள்

சிவனுக்கு எத்தனையோ திருநாமங்கள் இருந்தாலும் அவற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்தது எட்டு திருநாமங்கள். பவன், சர்வன், ஈசானன், பசுபதி, ருத்ரன், உக்ரன், பீமன், மகான் ஆகியவை மிகவும் உயர்வான சிவ பெருமானின் திருநாமங்களாகும். சிவனை மகா என்ற அடைமொழியுடன் இரு பெயர்களில் மட்டுமே குறிப்பிடுகிறோம். அதில் ஒன்று லிங்க வடிவமான மகாலிங்கம் என்றும், அஷ்டோத்திரத்தில் கடைசியாக குறிப்பிடப்படும் மகாதேவன் என்று குறிப்பிடு கிறோம்.

## சிவராத்திரியில் தீரும் பாவமும் இரட்டிப்பு பலன் தரும் மந்திரங்களும்

மகா சிவராத்திரி நாளில் விரதம் இருப்பதால் முன் ஜென்ம பாவங்கள் நீங்கும். நோய்கள், வறுமை நீங்கும். இந்நாளில் “ஓம் நம சிவாய” என்ற பஞ்சாட்சர மந்திரம், மகாமிருத்யுஞ்ஜய மந்திரம், சிவபுராணம் போன்றவற்றை பாராயணம் செய்வது மிகவும் சிறப்பானதாகும். இந்த நாளில் ருத்ராபிஷேகம் செய்வதும், கோவில்களில் நடக்கும் ருத்ராபிஷேகத்தில் கலந்து கொள்வதும் மிகவும் சிறப்பானதாகும். இந்த முறையில் மகா சிவராத்திரி விரதம் இருந்தால் முந்தைய மூன்று பிறவிகளில் செய்த பாவங்கள் நீங்கும். மனக்கவலைகள், நோய்கள், வறுமை நிலை ஆகியன நீங்கும். அதோடு வாழ்வில் அனைத்து விதமான இன்பங்களும், உயர்வும் கிடைக்கும். நாம் செய்யும் வழிபாடு, பூஜை ஆகியவற்றிற்கு இரு மடங்கு பலனை தரக் கூடியது மகா சிவராத்திரி விரதம் ஆகும்.



# சிவ மகிமையை சொல்லும் வேத புராண இதிகாசங்கள்



வேதங்களிலும், உபநிஷத்துகளிலும் சிவபெருமான், ருத்திரன் என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறார். ருத்திரன் என்றால் துன்பங்களைத் துடைப்பவன் என்று பொருள்.

பசுபதி, பூதபதி பூதநாதர் என்பன வேதங்கள் ருத்திரனுக்குச் சூட்டும் சிறப்புப் பெயர்கள், சிவன் உக்கிரனுக்குச் சூட்டும் சிறப்புப் பெயர்கள், சிவன் உக்கிரவடிவினன், ஜடாமுடி கொண்டவன், என்று ரிக் வேதத்தின் பிற்கால சூக்தங்கள் வருணிக்கின்றன.

சிவ வழிபாட்டின் மகிமையை முதல் முதலாக உணர்த்திய தனி நூல் சுவேதா சுவேதர உபநிஷதமாகும். ருத்திரனின் பேராற்றல்களை வருணிக்கும் அந்நூல் ருத்திர சிவவழி பாட்டுக்கு ஒரு திறவுகோல் எனலாம்.

சுக்லயஜுர் வேதத்தில் சிவனின் நூறு நாமங்கள் கூறப்பட்டிருக்கின்றன. யஜுர்வேதம், நம சிவாய என்று முழங்குகிறது. பதஞ்சலி முனிவரின் மகாபாஷ்யம் சிவனின் பெருமையையும் சிவனடியார் இயல்புகளையும் சுவைபடச் சித்தரிக்கிறது.

வியாசர் அருளிய சிவபுராணம் ஆதிசங்கரரின் சிவாநந்தலகிரி, அப்பைய தீட்சதரின் சிவார்க்கமணி, தீபிகா ஆகியவை ஒப்பற்ற சிவபக்தி நறுமலர்கள்.

சிவபெமானை லிங்கவடிவில் வழிபடும் தொடர்பாகப் பல புராண வழக்குகள் உள்ளன. திருமாலுக்கும், பிரமனுக்கும் தம் சக்தியை உணர்த்தப் பேரொளிப் பழம்பாக, அண்ணாமலையாகச் சிவபெருமான் நின்ற வரலாற்றை சொல்லுவது அண்ணாமலையார் புராணமாகும்.

e-magazine
aanmeegamalar.com



# சிவபெருமான் செய்த முக்கிய லீலைகள்

சிவபெருமான் செய்த லீலைகள் பல இருந்தாலும், சிவனை குறித்து அதிகம் கூறப்படும் இதிகாச புராண லீலைகளில் குறிப்பிடத்தக்கவைகளை பார்ப்போம்.

● மந்திரங்களுள் சிறந்த காயத்திரி தேவிக்குக் கணவர்.

● இராமரால் இராவணனை அழிக்க வேண்டி தனுஷ்கோடியில் சிவலிங்கத்தை நிறுவி "ராமேச்வரம்" என்னும் தன் பெயரையே சூட்டி வழிபட்டு இராவணனைவென்று வெற்றி பெறச் செய்தவர்.

● கண்ணன் கைலாச யாத்திரை சென்று சிவனை வழிபட்ட மையால் உலகிலேயே சிறந்த அழகான மன்மதனைப் போன்ற மகனைப் பெறும் பாக்கியத்தை அவனுக்கு அளித்தவர்.

● அதே மன்மதனை தன் பார்வையாலேயே அழித்தவர்.

● உலகை அழிக்கத் தோன்றிய காலகூட விஷத்தை விழுங்கியவர்.

● தனது பக்தன் மார்க்கண்டேயனைக் காக்க யமனின் திமிரை அடக்கியவர்.

● திரிபுர அசுரர்களை அழித்தவர்.

● தட்ச யாகத்தை நாசம் செய்தவர்.

● அர்ச்சுனனுக்கு பாசுபத அஸ்திரம் வழங்கியவர்.

● நரஸிம்மருடைய கர்வத்தை அடக்க சரப அவதாரம் எடுத்தவர்.

● காசியில் வேத வியாசர் விஷ்ணு தான் சிறந்தவர் என்று கையை மேலே தூக்கியதை மடங்காமலே ஆக்கச் செய்தவர்.

● பிரம்மாவினுடைய சிறு அபராதத்தால் தலையைக் கொய்து மாலையாக அணிந்தவர்.

● வாமனாவதாரம் எடுத்த விஷ்ணுவின் கர்வத்தை அடக்க வாமனரின் தோலை உரித்து சட்டையாக அணிந்து கொண்டவர். சீகாழியில் இன்றும் சட்டைநாதரைக் காணலாம். இன்னும் பல உயர்வுகள் உள்ளன.

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# சிவராத்திரியும் அறிவியலும்

சிவன் என்ற உருவம் நம்முடைய ஆத்மாவுடன் தொடர்புடையது.

சிவன் அண்டத்திலும், நமது ஆத்மா நமது உடலில் இருக்கும் இருவேறு சக்திகள், இந்த இரு சக்திகளும் பக்தி, அன்பு என்பதன் மூலம் ஒன்றிணையும்போது இறை சிந்தனை தானே பிறக்கும்.

அந்த வகையில் அண்டத்துல இருக்குறது பிண்டத்துலயும் இருக்குன்னு ஒரு பழமொழி சொல்லாடலை நமது முன்னோர் பின்பற்றினர். அந்த வகையில் அந்த அண்டத்தில் ஒரு மாறுதல் வரும்போது இந்த பிண்டத்திலும் அதன் எதிரொலி இருக்கும்.

ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நாளில் அண்டத்தில் உள்ள கதிர் அலைகளின் தாக்கத்தால் நம் உடலில் உள்ள சுரப்பிகள், அமிலங்கள் வெளியேற்றத்தில் மாறுபாடு அடைகின்றன.

அந்த சமயத்தில் நமது பிண்டம் உறங்காமல் விழித்திருந்தால் அவற்றின் செயல்பாடு நம் ரத்த அணுக்களை பாதிக்காது . இந்த காலகட்டத்தில் கண்டதையும் சாப்பிடாமல் எளிதில் ஜீரணமாகும் உணவுகளை மட்டும் குறைந்த அளவில் சாப்பிட்டு சிவனை வணங்குவது நல்லது.

எல்லா காலங்களிலும் இவற்றை விளக்கி சொல்ல முடியாது, காலங்கள் மாறும்போது இறை சிந்தனை, வழிபாட்டில் மாற்றங்கள் ஏற்படும்போது மேற்கண்ட உண்மை நிகழ்வு ஆராய்ச்சிக்கு உட்பட்டு புறக்கணிக் கப்படும் என்பதை உணர்ந்த நம் முன்னோர்கள், இந்த தினத்தை சிவனுக்குரிய இரவாக மாற்றியிருக்கலாம் என்று அறிவியல் ரீதியாக கணிக் கப்பட்டுள்ளது.

இந்து மதம் என்பது மனித உடலும், உள்ளமும் மேன்மையடைய உதவும் கருத்துக் களையும்,செயலையும் உள்ளடக்கியதாக கொண்டு விளங்குவதால் இறைநிலை, சிந்தனை மீது ஆர்வமில்லாதவர்களும், இந்த சிவராத்திரி தினத்தில் சிவனை வழிபட மனமில்லாதவர்களும் பயனடைய வேண்டும் என்பதால் அறிவியல் ரீதியாக இந்த தினத்தில் இரவு தூக்கத்தை மறந்து, மனம் அமைதி அடையும் இடத்தில் தனிமையில் இருங்கலாம், ஆற்றங்கரை, குளக் கரை, மலை, கடற்கரை என எங்கெல்லாம் நமது மனம் விரும்புகிறதோ அந்த இடங்களில் அலைபாயும் மனத்தை சாந்தியடையவைக்கும் உகந்த இடத்தை தேடி சென்று கண்விழித்து அன்றைய பொழுதை கழிக்கலாம் என்றும் அறிவியல் ரீதியாக கூறப்படுகிறது அனைத்திலும் ஈசன் உள்ளான் என்பதால் இயற்கையுடன் ஐக்கியமாவதும் சிவனிடம் ஐக்கியமாவதற்கு சமமே.



e-magazine
anmeegamalar.com

# அருவத்திருமேனியும், அருவுருவத்திருமேனியும் கொண்ட ஈசன்

சிவம் என்றால் அன்பு. கடவுள் சிவனை சிவம் என்றும் சிவபெருமான் என்றும் பரவலாக அழைக்கின்றனர்.


இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள மும்மூர்த்திகளுள் ஒருவர். இவர் தனது ஒரு பகுதியிலிருந்து அன்னை பராசக்தியை உருவாக்கினார். பின்னர் இருவரும் சேர்ந்து ஆனந்த தாண்டவமாடி அண்ட சராசரங்களை உருவாக்கினார். தனது உடுக்கையிலிருந்து படைத்தல், காத்தல், அழித்தல்,மறைத்தல் என்னும் ஐந்து பணிகளுக்கும் அடிப்படையான ஓம் என்ற பிரணவ மந்திரத்தை உருவாக்கினார்,

சிவன் என்றால், தமிழில் சிவந்தவன். வடமொழியில் சிவம்என்றானது. யோகநிலையில் ஆழ்ந்திருப்பதால் யோகி என்றும் அழைக்கின்றனர். அஷ்டமா சித்திகளில் வல்லவர் என்பதால் இவரைச் சித்தன் என்றும், சுடுகாட்டில் மனம் பேதலித்துப் பேய்களுடன் ஆடுபவராகச் சித்தரிக்கப்படுவதால் பித்தன் என்று குணங்களின் அடிப்படையில் அழைக்கப்படுகிறார்.

சிவபெருமான் பிறப்பும்இறப்பும் இல்லாதவர். மும்மூர்த்திகளையும், தேவர்களை யும், அசுரர்களையும் உலகினையும், உலக உயிர்களையும் தோற்றுவிப்பதாகவும், பிரளய காலத்தில்அனைத்தையும் அழித்துத் தன்னுள் ஒடுக்கிச் சிவன் மட்டும் நிலையாக இருப்பதாகச் சைவ சமய இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

பிருங்கி முனி வர் வண்டு வடிவெடுத்துச் சிவ பெருமானை வழிபட்டதால் சிவ லிங்கத்தில் வண்டு துளைத்த அடையாளம் ஏற்பட்டது. இந்த அரிய வடிவினை நாம் திருநல்லூரில் காணலாம். இங்கு இறைவன் பஞ்சவர்ணேஸ்வரர் என்ற திரு நாமத்துடன் அருள்பாலிக்கிறார்.

அன்பாக அருட்பெருஞ்ஜோதியாக, இன்பமாக மங்களமாக மறைபொருளாக எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அந்தப் பரமனைக் கடல் கொஞ்சும் குமரி முதல் கைலைப்பனிமலை வரை ஆலயங்கள் அமைத்து வழிபட்ட பெருமை நமது புண்ணிய பூமிக்கு உண்டு.



சிவ வழிபாட்டின் சிறப்புகளை வேதங்கள் விளக்குகின்றன. வேதங்களில் சிவபெருமான் ருத்ரன் என்று அழைக்கப்படுகிறார். ருத்ரன் என்றால் துன்பங்களைத் துடைப்பவன் என்று அர்த்தம். பசுபதி, பூதபதி பூதநாதர் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

சிவபெருமான் அருவம், அருவுருவம், உருவம் என மூன்று வடிவங்களில் உள்ளார்.

அருவத்திருமேனி சித்தர் என்றும், அருவுருவத்திருமேனி பரம்பொருள் என்றும், உருவத் திருமேனி பிரவிருத்தர் என்றும் அழைக்கப்படுகிறது.

தடத்தநிலையில் ஈசன் கொள்ளும், அறுபத்து நான்கு வடிவங்கள் ஆகமங்களில் விளக்கப் பட்டுள்ளன. அவற்றில் சிறப்பான இருபத்தைந்து சிவமூர்த்தங்கள் மகேஸ்வர மூர்த்தங்கள் என அழைக்கப் படுகின்றன.

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**


தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



GET IT ON Google Play

# அதிகம் வெளியே தெரியாத சிவபெருமானின் வடிவங்கள்

e-magazine
aanmeegamalar.com



சிவபெருமான் அரக்கர்களை அளிக்க எடுத்த பல அவதாரங்களை பற்றி நாம் கேள் விப்பட்டிருக்கிறோம் ஆனால் நாம் அதிகம் கேள்விப்படாத அவதாரங்கள் இன்னும் பல உள்ளது அது மட்டுமின்றி நமக்கு தெரிந்த அவதாரங்களின் சிறப்புகளையே நாம் இன்னும் முழுமையாக அறிந்துகொள்ளவில்லை.

## பஞ்சமுக சிவன்

சில கோவில்களில் சிவபெருமான் லிங்க வடிவில் இல்லாமல் பஞ்சமுக உருவத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வருகிறார். இந்த ஐந்து முகங் களுக்கும் தனித்தனி பெயர் இருக்கிறது. ஒவ்வொரு முகமும் சிவபெருமானின் ஒரு அம்சத்தை விளக்குகிறது. அவை முறையே இஷானா, தத்புருஷா, அகோரா, வாமதேவா மற்றும் சத்ஜ்யோதா. இஷானா சிவபெருமானின் நிலையான தன்மையை குறிக்கிறது இது தென்கிழக்கு திசையை நோக்கி இருக்கும். தத்புருஷா முகம் சிவபெருமானின் ஈகோவை குறிக்கிறது இது



கிழக்கு நோக்கி இருக்கும்.

அகோரா முகம் சிவபெருமானின் ஆக்ரோஷத்தையும், மறுபிறப்பு ஆற்றலையும் குறிக்கிறது, இந்த முகம் தெற்கு நோக்கி இருக்கும். வாமதேவா முகம் ஈசனின் வைத்திய திறமையையும், பாதுகாக்கும் பண்பையும் பிரதிபலிக்கிறது, இந்த முகம் வடக்கு நோக்கி இருக்கும். சத்ஜ்யோதா சிவபெருமானின் படைப்பாற்றலை பிரதிபலிக்கிறது, இது மேற்கு நோக்கி இருக்கும்.

## அனுகிரகமூர்த்தி

இந்த அம்சம் சிவபெருமானுடைய அமைதியான காலத்தை குறிக்கும். ஈசன் அழிக்கும் கடவுள் என மட்டுமே அறிந்த நம்மில் பலருக்கு சிவபெருமான் அனுகிரக மூர்த்தியாய் இருக்கும்போது வரங்களை அள்ளித்தருபவர் என தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சிவபெருமான் தனது குடும்பத்துடனும், பக்தர்களுடன் இருக்கும்போது அனுகிரக மூர்த்தியாக காட்சியளிப்பார்.

## உக்கிரமூர்த்தி

சிவபெருமான் அழிக்கும் கடவுள் என்பது அனைவரும் அறிந்தது. உக்கிரமூர்த்தியான சிவபெருமான் ருத்ரர், பைரவர், சம்ஹார மூர்த்தி என பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். உக்கிரமூர்த்தியின் ஒவ்வொரு வடிவமும் பூமியில் உள்ள அரக்கர்களை அழிக்கும் அவதாரமாகும். சிவபெருமானின் பல்வேறு உக்கிரமூர்த்தி அவதாரங்கள் கங்கல பைரவர், கஜாசுர வதமூர்த்தி, திரிபுராந்தகமூர்த்தி, சரபேசமூர்த்தி, கலரிமூர்த்தி, கமண்டகமூர்த்தி, அந்தகாசுர வதமூர்த்தி, பைரவமூர்த்தி என சிவபெருமானின் உக்கிரமூர்த்தி அவதாரங்கள் நீண்டுகொண்டே செல்கிறது. ஒவ்வொரு அவதாரமும் அரக்கர்களை அழிக்கவும் , பூமியில் நீதியை நிலை நாட்டவும் சிவபெருமானால் எடுக்கப்பட்டது.

## தாண்டவமூர்த்தி

சிவபெருமான் பல்வேறு நடனங்களின் கடவுளாகவும் கருதப்படுகிறார். இந்திய பாரம்பரிய நடனமான பரதத்தில் இருக்கும் அனைத்து முத்திரைகளும் சிவபெருமானிடம் இருந்தே





தோன்றியதாக கூறப்படுகிறது. இந்த ஒவ்வொரு முத்திரையும் உலகின் நிலைப்பாடு ஆகும்,சிவபெருமான் இதனை தன் பக்தர்களின் துன்பங்களை போக்க பயன்படுத்தியதாக கருதப்படுகிறது.

புராணங்களில் தன் மனைவியை மகிழ்விக்க சிவபெருமான் எவ்வாறெல்லாம் நடனம் புரிந்தார் என்ற குறிப்புகளும் உள்ளது. நடனங்களின் கடவுளாக சிவபெருமானின் நட்ராஜ அவதாரம் கருதப்படுகிறது. அது மட்டுமின்றி ஈசன் மகிழ்ச்சியில் ஆடும் ஆனந்த தாண்டவ மூர்த்தி, உமை தாண்டவ மூர்த்தியாக அன்னை பார்வதியுடன் நடனம் ஆடுதல், திரிபுர தாண்டவ மூர்த்தியாக நடனம் ஆடி திரிபுரசுரனை வதம் செய்தது என சிவபெருமான் தாண்டவ மூர்த்தியாக பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.

## ஹரிஹர மூர்த்தி

ஹரிஹரன் அல்லது சங்கரநாராயணன் என்று அறியப்படும் இந்த வடிவம் சிவன் மற்றும் பெருமாள் இணைந்த வடிவமாகும். இது சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் இடையே உள்ள நட்பையும், புரிதலையும் உணர்த்தும்படி உள்ளது.

இந்த அவதாரத்தில் வலதுபுறம் ஈசனின் வலது புறமும் இடப்புறத்தில் பெருமாளின் இடதுபுறமும் இருக்கும்.

## பிக்ஷதனா

பிக்ஷதனா என்பதன் பொருள் பிச்சையெடுத்தல் என்பதாகும். இந்த அவதாரத்தில் அவர் நாடோடியாக அழிந்துகொண்டிருப்பார்.

சிவபெருமானின் பிக்ஷதன வடிவம் உலகில் உள்ள அகந்தை மற்றும் அறியாமையை அகற்ற வேண்டும் எனபதை குறிக்கும்.

இந்த வடிவத்தில் சிவ பெருமான் ஆடைகள் குறைந்த மற்றும் போன மனநிலையில் இருப்பார். நன்கு கைகளை உடைய துறவி போல சிவபெருமான் இந்த வடிவத்தில் காட்சியளிப்பார்.

# லிங்கத் திருமேனியின் காரணம்




பெரும்பாலான கோவில்களில் சிவபெருமான் மூலஸ்தானத்தில் லிங்க வடிவமாகவே காட்சி தருகிறார். லிங்கம் என்ற சொல்லுக்கு அடையாளம் அல்லது அறிகுறி என்று பொருள். மற்ற தெய்வங்கள் அனைத்தும் மனித உருவத்திலேயே காட்சி தரும் நிலையில், சிவனுக்கு மட்டுமே லிங்க ரூபம் உண்டு. இதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. லிங்கத்தின் மேல் பாகம் நீள்வட்ட வடிவிலும், இடையில் இருக்கும் ஆவுடையார் வட்ட வடிவிலும் இருக்கும்.வானத்தை நிமிர்ந்து பார்த்தால் அது அதன் நான்கு முனைகளும் வளைந்த வடிவிலேயே காட்சி தரும். இந்த பிரபஞ்சத்தை உள்ளடக்கிய வடிவம் என்பதால் லிங்கம் வளைந்து காணப்படுகிறது. அனைத்துலகுமாக ஈசனே காட்சி அளிப்பதால் உருவத்தைபிரதி பலிக்காமல், அனைத்தும் தானே என்ற வகையில் லிங்க சொருபமாக காட்சியளிப்பதாக கூறப்படுகிறது.

## மகேஸ்வரன்

பிரபஞ்சம் முழுவதும் நிறைந்தவர் என்பதாலேயே சிவனை மகேஸ்வரன் என்றும், தேவர்களுக்கு எல்லாம் தேவன் என்பதால் மகாதேவன் என்றும் குறிப்பிடுகிறோம். மகேஸ்வரன் என்று சொல்லுக்கு ஆட்சி செலுத்துபவன், தலைவன் என்று பொருள். அதே போல் அனைவரும் குறிப்பிடும் ஈஸ்வரன் என்ற சொல்லுக்கு உரிமையானவன் என்று பொருள். இந்த உலகிற்கே தலைவனாகவும், உரிமையானவனாகவும் சிவனே இருப்பதால் அவரை சிறப்பித்து கூறும் வகையில் ஈஸ்வரனை மகேஸ்வரன் என குறிப்பிடுகிறோம்.

## சதாசிவனின் பொருள்

சிவனை மட்டுமே சதாசிவன் என அழைக்கிறோம். சதா என்ற சிறப்பு சொல்லால் வேறு எந்த தெய்வமும் அழைக்கப்படுவது கிடையாது. சதா என்ற சொல்லுக்கு எங்கும், எப்போதும் என்று பொருள். எங்கும், எப்போதும், எதிலும் நீக்கமற நிறைந்திருப்பன் சிவன் என்பதாலேயே அவரை சதாசிவன் என சொல் கிறோம். 25 தலைகள் கொண்ட சதா சிவனின் ரூபத்தில் மிக சில கோவில்களிலும், கோவில் கோபுரங்களிலும் மட்டுமே தரிசிக்க முடியும்.

## சிவன் என்ற சொல்லின் பொருள்

சிவன் என்ற சொல் மிக பழமையானது ஆகும். மிக பழமையான வேதம் என சொல்லப்படும் ரிக் வேதத்திலும், சமஸ்கிருத அகராதிகள் பலவற்றிலும் சிவன் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவன் என்ற சொல்லுக்கு மங்களம், சுபம், கல்யாண குணம் என்று பொருள். நன்மை, மகிழ்ச்சி, ஆரோக்கியம், செல்வம் ஆகியவைகளும் இதற்கு அர்த்தமாக சொல்லப்படுகிறது. இவை அனைத்திற்கும் அடிப்படையாக விளங்கக் கூடிய பண்பு அன்பு. அன்பு, பாசம், கருணை எங்கு நிறைந்திருக்குமோ அங்கு தான் நன்மை, மகிழ்ச்சி, செல்வம் போன்றவை இருக்கும். அனைத்து இடங்களிலும், பொருள்களிலும் நிறைந்து இருக்கக் கூடிய சிவ பெருமான் அனைத்து நலன்களையும் தரக் கூடிய அடிப்படை குணமான அன்பை குணமாக கொண்டவர் என்பதால் அன்பே சிவம் என ஆன்றோர்கள் சொல்வதுண்டு.



# ராத்ரம் என்ற சொல்லும் சிவபெருமானை உணர்த்து அறிந்து கொள்ளும் ராத்திரியும்

ராத்திரி என்றால் பொதுவாக இரவு பொழுதை குறிக்கும் என்பார்கள். ஆனால் ராத்ரம் என்ற சொல்லுக்கு அறிவு என்றும் பொருள் உண்டு. உலகின் தலைவனான சிவ பெருமானை உணர்ந்து அனுபவிக்கும் அறிவை தரக் கூடிய ராத்திரி என்பதாலேயே மகாசிவராத்திரி இத்தனை சிறப்புடையதாக கருதப்படுகிறது.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

சிவனை நம்முள் உணர்ந்து, நமக்குள் இருக்கும் சிவ தன்மை வெளிப்படும் நாள் என்பதால் சிவராத்திரியில் விரதம் இருந்து, சிவ பூஜை செய்வது மிகவும் உயர்ந்த பலன்களை தரக் கூடியது என சாஸ்திரங்கள் சொல்கின்றன.

மகாசிவராத்திரி அன்று இரவு நான்கு கால பூஜைகள் நடைபெறும். இதில் முதல் காலத்தில் பிரம்மாவும், இரண்டாம் காலத்தில் பார்வதி தேவியும், மூன்றாம் காலத்தில் தேவர்களும், நான்காம் காலத்தில் மனிதர்கள் உள்ளிட்ட பிற உயிரினங்களும் சிவனை வழிபட்டு பயனடையும் காலம் என சொல்லப்படுகிறது.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

## சிவராத்திரியும் வரங்களும்

தேய்பிறை சதுர்த்தசி திதியை மகாநிசி என குறிப்பிடுவதுண்டு. அதாவது அமாவாசைக்கு முன்பு வரும் இரவு 11.36 மணி முதல் 12.24 வரையிலான காலமாகும்.

இந்த நேரத்தில் சிவ பூஜை செய்வது மிக உயர்வானது ஆகும். சந்திராயனம் எனப்படும் சந்திரனை அடிப்படையாக கொண்ட நாட்காட்டியில் மாசி மாதத்தை மகா மாதம் என்று கூறுவார்கள்.

அதனால் இந்த மாதத்தில் வரும் சிவராத்திரியை மகாசிவராத்திரி என்கிறோம். பார்வதி தேவி உலக நன்மைக்காக சிவ பெருமானை பூஜை செய்து வழிபட்டு, பல வரங்கள் பெற்ற நாளையே நாம் மகாசிவராத்திரியாக கொண்டாடுகிறோம்.

e-magazine
aanmeegamalar.com

# சிவ ராத்திரியும் பூஜையும்




மகா சிவராத்திரி தினத்தில் விரதம் இருந்து சிவ வழிபாடு செய்வது அவசியம். விரதத்தை மேற்கொள்வோர் சிவ ராத்திரி அதிகாலையிலோ அல்லது முதல் நாளோ வீட்டை சுத்தம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

எந்த ஒரு விரதத்தை தொடங்குவதற்கு முன் ஒரு நூலை மஞ்சளைத் தடவி, மஞ்சள் நூலாக்கி அதை கையில் கட்டிக் கொள்ளுங்கள். இந்த மஞ் சள் நூலை கட்டிக் கொண்டால் விரதம் ஆரம்பம் என பொருள்.

ஆன்மிகமலர் .காம்

காலையில் நம் பூஜை அறையில் விளக்கேற்றி வழிபட்டு விரதத்தை தொடங்கலாம். அன்று முழுவதும் விரதமிருந்து, அன்று மாலை முதல் சிவ பூஜை செய்ய வேண்டியது அவசியம்.

இரவு முழுவதும் கண்விழித்துச் சிவ ஆரா தனை செய்யப் போகிறவர்கள் இரவில் சிவ லிங்கத்திற்கு ஐந்து முறை அல்லது மூன்று முறை பூஜைகள் செய்ய வேண்டும்.

மூன்று பூஜைகள் செய்ய நினைப்பவர்கள் இரவு 7 மணிக்கு ஒரு பூஜை, 12 மணிக்கு பின் ஒரு பூஜை, பிரம்ம முகூர்த்தத்தில் ஒரு பூஜை செய்ய வேண்டும்.

ஐந்து பூஜைகள் இரவு முழுவதும் செய்ய நினைப்பவர்கள், சிவலிங்கத்திற்கு இரவு 8 மணிக்கு ஒரு பூஜை, 10 மணிக்கு ஒரு பூஜை, 12 மணிக்கு ஒரு பூஜை, 2 மணிக்கு ஒரு பூஜை, 4 மணிக்கு ஒரு பூஜை என ஐந்து பூஜைகள் செய்வது நல்லது.

## அபிஷேகம் செய்யும் அடிப்படை பொருட்கள்

பால், சந்தனம், விபூதி, பன்னீர், மஞ்சள்,

குங்குமம், இளநீர், பஞ்சாமிர்தம், வெட்டி வேர், வில்வ இலை அபிஷேகத்திற்கு முக்கிய பொருட்கள்.

கண்டிப்பாக அபிஷேகத்திற்கு வில்வ இலை பயன்படுத்துவது அவசியம்.

சிவ லிங்கத்தை ஒரு தாம்பூலத் தட்டில் வைத்து அபிஷேகம் செய்யவும்.

சிவ லிங்கம் மேல் முழுவதும் வில்வ இலையைப் போட்டு அர்ச்சித்து, நமசிவாய என்ற மந்திரத்தை சொல்லிய படியே அபிஷேகம் செய்ய வேண்டும்.

அதன் பின்னர் சிவ லிங்கத்தை எடுத்து வைத்து அலங்காரம் செய்யுங்கள்.

## சிவ லிங்கத்திற்கு விளக்கேற்றும் முறை:

பொதுவாக சிவ லிங்கத்திற்கு விளக்கேற்றுபவர்கள் ஒரு விளக்கில் இருபுறமும் தீபம் வரும் படி திரி போட்டு விளக்கேற்ற வேண்டும். ஒன்று சிவனை நோக்கியும், மற்றொன்று அவருக்கு எதிரில் அமர்ந்திருக்கும் நந்திக்காக இயற்றப்படுகிறது.

நந்தி ஒரு தூதுவரைப் போல, நாம் நினைப்பதை எல்லாம், சிவபெருமானிடம் முறையிட்டு வரத்தை வாங்கி தருவார். அதனால்தான் சிவனுக்கு தீபம் ஏற்றுபவர்கள் நந்திதேவருக்கும் சேர்த்து விளக்கேற்றுவது அவசியம்.

இரவெல்லாம் சிவனுக்கு அபிஷேக, ஆராதனை செய்து, அலங்காரம் செய்வார்கள்.

பல திருக்கோயில்களில் சிவராத்திரி அபிஷேகம் முடிந்து பிரம்ம முகூர்த்தத்தில் அலங்காரம் செய்வது வழக்கம். குறிப்பாக எல்லா காய்கறி மாலையாகவும், பூக்களால் அலங்காரமும் செய்வார்கள். சில கோயில்களில் அண்ணத்தால் அலங்காரம் செய்வார்கள். நாம் பூக்களால் அலங்காரம் செய்யலாம்.

## பிரசாதம்

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்

நாம் புளி சாதம், எலுமிச்சை சாதம், தயிர்சாதம், தக்காளி சாதம், எல்லா காய்கறிகளும் போட்ட சாதம் செய்யவும். அதோடு சிவனுக்குமிகவும் பிடித்த எல்லா தானியங்களும் சேர்த்து வேகவைத்ததை பிரசாதமாக வைத்து வழிபடலாம்.

சிவ லிங்கம் வைத்துள்ளவர்கள் இப்படி அபிஷேக அலங்காரம் செய்யலாம். சிலர் சுவாமி படங்கள் தான் வைத்துள்ளோம் என்பவர்கள், பிரம்ம முகூர்த்தத்தில் அதற்கு நன்றாக பூக்களால் அலங்காரம் செய்யலாம்.



சிவ நாமத்தை 501 முறை சொல்லுங்கள். மறுநாள் காலையில் அருகில் உள்ள சிவ ஆலயத்திற்கு சென்று வழிபட்டு விரதத்தை முடிக்கலாம்.

இரவு முழுவதும் கண் விழிக்க முடியாதவர்கள், சனிக்கிழமை அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் விழித்து பூஜை செய்து ஆறு மணிக்குள் பூஜையை முடிக்கலாம். பின்னர் கோயிலுக்கு சென்று குடும்பத்தின் பெயரில் அர்ச்சனை செய்யலாம்.

## தியானம் இருத்தல்:

சிவராத்திரியில் மிக முக்கியமாக செய்ய வேண்டியது தியானம், சிவனை நினைத்து தியானம் எவ்வளவு நேரம் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் தியானம் செய்வது நல்லது.

சிவாலயங்களில் நடைபெறும் நான்கு யாம அபிசேக ஆராதனைகளுக்கு அவரவர் வசதிக்கேற்பப் பொருள்களைக் கொடுத்து உதவலாம்.

மகாசிவராத்திரியன்று இறைவனுக்கு நான்கு ஜாம பூஜைகள் செய்யப்படும். ஒவ்வொரு ஜாமத்தின் போதும் அபிஷேக, ஆராதனைகள் செய்யப்படுவது வழக்கம்.

ஒவ்வொரு ஜாமத்திலும் செய்யப்படும் அபிஷேக அர்ச்சனைகளைப் பார்க்கலாம்.

**முதல் ஜாமம்:** பஞ்ச கவ்ய அபிஷேகம், சந்தனப் பூச்சு, வில்வம், தாமரை அலங்காரம், அர்ச்சனை, பச்சைப் பயறுப் பொங்கல் நிவேதனம், ரிக்வேத பாராயணம்.

**இரண்டாம் ஜாமம்:** சர்க்கரை, பால், தயிர், நெய் கலந்த ரவை, பஞ்சாமிர்த அபிஷேகம், பச்சைக் கற்பூரம், பன்னீர் சேர்த்து அரைத்துச் சாத்துதல், துளசி அலங்காரம், வில்வம் அர்ச்சனை, பாயசம் நிவேதனம், யஜூர் வேத பாராயணம்.

**மூன்றாம் ஜாமம்:** தேன் அபிஷேகம், பச்சைக் கற்பூரம் சாத்துதல், மல்லிகை அலங்காரம், வில்வம் அர்ச்சனை, எள் அன்னம் நிவேதனம், சாம வேத பாராயணம்.

**நான்காம் ஜாமம்:** கருப்பஞ்சாறு அபிஷேகம், நந்தியா வட்டை மலர் சாத்துதல், அல்லி, நீலோற்பவம், நந்தியா வர்த்தம் அலங்காரம், அர்ச்சனை, சுத்தான்னம் நிவேதனம், அதர்வண வேதம்.

e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free


இதுவரை வெளிவந்த
172 க்கும் மேற்பட்ட
இதழ்களை

aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.



# காசியில் முக்கிய விநாயகர் ஆலயங்கள்



டுண்டி விநாயகர்

விநாயகர் தனது தந்தைக்கு வழி வகுத்த பிறகு, சிவபெருமான் காசியில் பிரமாண்டமாக நுழைந்தார். சிவபெருமான் விநாயகரின் செயலைப் பாராட்டினார். கணேச பெருமான் பின்னர் டுண்டி விநாயகர் என்று அழைக்கப்பட்டார். விஸ்வேஸ்வரர் கோவிலில் சிவபெருமானை வழிபட வரும் அனைத்து பக்தர்களும் கண்டிப்பாக டுண்டி விநாயகரை வழிபட வேண்டும்.

தினமும் காலையில் டுண்டி விநாயகரை வழிபடுபவர்களின் அனைத்து தடைகளும் நீங்கும். முழு பக்தியுடன் டுண்டி விநாயகரின் பெயரை மட்டும் எடுத்துக்கொள்பவர் எல்லாவிதமான மகிழ்ச்சியையும் பெறுவார். அனைத்து செவ்வாய் கிழமைகளிலும் பக்தர்கள் டுண்டி விநாயகரை வழிபட வேண்டும்.

பின்னர் சிவன் காசி முழுவதும் பரவியுள்ள




e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



விநாயகரின் பல்வேறு வடிவங்களை விவரித்தார்

சதுர்த்தியுடன் இணைந்த செவ்வாய்க் கிழமைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

அமாவாசைக்குப் பின் வரும் மாத மாதம் சதுர்த்தியில் டுண்டி விநாயகப் பெருமானுக்கு பூஜை செய்பவர் கடவுளின் அருள் பெறுவார். (ஸ்கந்த புராணம், காசி காண்டம், அத்தியாயம் 57).

டுண்டி விநாயகர் ஒரு பெரிய விநாயகர் சிலை. இந்த இடம் நடைமுறையில் இருபத்தி நான்கு மணிநேரமும் திறந்திருக்கும். பக்தர்கள் இறைவனுக்கு பூக்கள் அல்லது பச்சை புல் மற்றும் சில இனிப்புகளை நைவேத்தியம் என வழங்கலாம். பலத்த ரோந்து போலீசார் மற்றும் பிற படைகள் இருப்பதால், பக்தர்கள் கூட்டம் குறைவாக இருக்கும் போது அதிகாலையில் தரிசனம் செய்யலாம்.

## அர்க்க விநாயகர்

அர்க்க விநாயகரை வழிபட்டால் பக்தர்களின் விருப்பங்கள் நிறைவேறும். ஞாயிற்றுக்கிழமை அர்க்க விநாயகர் வழிபாடுகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.



அர்க்க விநாயகர்



துர்க்க விநாயகர்

## பூஜையின் வகைகள்

அர்க்க விநாயகருக்கு குறிப்பிட்ட பூஜை எதுவும் இல்லை என்றும், பக்தர்கள் இந்த தெய்வத்தை தானாகவே வழிபடுவதாகவும் உள்ளூர் மக்கள் கூறுகின்றனர்.

## துர்க்க விநாயகர்

காசியில் அமைந்துள்ள மற்றுமொரு விநாயகர் ஆலயம் துர்க்க விநாயகர் ஆலயம் துர்க்க விநாயகர் இரண்டு நுழைவாயில்களைக் கொண்ட ஒரு தனிக் கோயிலாகும், மேலும் ஏராளமான பக்தர்கள் பிரார்த்தனை செய்ய தொடர்ந்து வருகிறார்கள். இத்தலத்தில் தீபாராதனையின் போது கூட்டம் அலைமோதும்.

துர்க்க விநாயகரை வழிபட்டால் நினைத்த காரியம் நிறைவேறும் என்பதால் இத் தலத்து விநாயகரிடம் வேண்டுதல்கள் அதிகரித்து வருகின்றன.

கோவில் காலை 05.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை மற்றும் மாலை 04.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும். இக்கோவிலில் தீப ஆராதனைகளில் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178



e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com

# திங்கட்கிழமை சிவனை வழிபட்டால் தீராக் கடனும் எளிதில் தீரும்



தேவார மூவருள் ஒருவரான திருஞானசம்பந்தர் தனது திருமணம் முடிந்த கையோடு மனைவியுடன் சிவலிங்க ஜோதிபிழம்பிற்குள் நுழைந்து முக்தி பெற்ற தலம்,

நல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சாள்புரம்.

திருஞானசம்பந்தர் வேதநெறி காக்க தமது பதினாறாவது வயதில் திருமணம் செய்துகொள்ள சம்மதித்தார்.

திருநல்லூர் என்னும் ஊரில் உள்ள நம்பியாண்டார் நம்பியின் மகள் ஸ்தோத்திர பூரணாம்பிகையை சம்பந்தருக்கு மணம் பேசி நிச்சயித்தனர்.

வைகாசி மாதம் மூல நட்சத்திர நாளில் திருநல்லூர்ப் பெருமணம் சிவாலயத்தில் திருநீலநக்க நாயனார் திருமணச் சடங்கு செய்வி”க சம்பந்தர் ஸ்தோத்திரபூர்ணாம்பிகையை கரம்பிடித்தார்.

பின்பு தன் அன்பு மனைவியுடன் அக்னியை வலம் வந்தார். அப்போது அவர் மனம் தவித்தது.

“இருவினைக்கு வித்தாகிய இல்வாழ்க்கைக்கு ஆட்பட்டுவிட்டோமே! இனி இவளோடும் அந்தமில்லாத சிவனோடும் சேர்வேன்’

என்று கூறி “கல்லூர் பெருமணம்‘ எனத் தொடங்கும் பதிகம் பாடி சிவனின் திருவடியை அடைய எண்ணினார்.

அப்போது ஈசனின் கருவறையில் இருந்து, திருஞானசம்பந்தா, இப்போது கருவறையில் உள்ள சிவலிங்கத்தில் ஜோதிபிழம்பு தோன்றும். அதில் நீ வருவதற்காகவே அழகிய திருவாசலும் அமைத்திருப்போம்.

நீயும், உனது மனைவியும், இந்தத் திருமணம் காண வந்தோர் மற்றும் என் தொண்டர்களுடன் அந்தத் திருவாசல் வழியாக என்னிடம் வந்து

சேர்ந்திடுக என்று ஒலித்த அசரீரி, அங்கிருந்த அனைவருக்கும் கேட்டது உடனே மகிழ்ச்சியில் திளைத்த அனைவரும் சம்பந்தருடன் சேர்ந்து ஈசனடியை சேர தயாரானார்கள்.

உடனே சம்பந்தர்

“காதலால் கசிந்து கண்ணீர் மல்கி எனத் தொடங்கும் நமசிவாய பதிகத்தைப் பாடினார். (இது சம்பந்தர் பாடிய கடைசி பதிகம் என்பது குறிப்பிடத்தக்கது).

பதிகம் முடியும் வேளையில் கருவறையில் உள்ள சிவலிங்கம் இரண்டாகப் பிளந்து ஜோதிப் பிழம்பு உண்டானதோடு, அந்தப் பிழம்பின் மையத்தில் ஒரு வாசலும் தோன்றியது.

யாவரும் அதன் உள் புகுந்து ஈசனுடன்ஐக்கிய மானார்கள். அதன்பின் இரண்டாக பிளந்த சிவலிங்கள் ஒன்றாகி ஜோதிப்பிழம்பு மறைந்து குளிர்ந்தது.

சம்பந்தரின் திருமணம் காண வந்தஅனைவருக்கும் சிவலோகப் பதவி கொடுத் தருளியதாலும் இந்த தல ஈசனுக்கு சிவலோக தியாகேசர் என்று பெயர் வந்தது.

சிவலோக தியாகேசர் திருக்கோயிலின் ராஜ கோபுரம் ஐந்து நிலைகளைக் கொண்டதாக கிழக்கு நோக்கி அமைந்திருக்கிறது. கோயிலின் எதிரே பஞ்சாட்ச தீர்த்தக்குளமும் உள்ளது. தல விருட்சம் வில்வமரம். திருஞானசம்பந்தர் ஸ்தோத்திர பூரணாம்பிகையோடு திருமணக் கோலத்தில் தனிச்சன்னதியில் தெற்குநோக்கி அருள்பாலிக்கிறார்.

சம்பந்தர் முருகப் பெருமானின் அவதாரமாக கருதப்படுவதால் அவருக்கு முருக அஷ்டோத்திரம் கூறி வழிபாடு நடத்தப்படுகிறது.



திருஞானசம்பந்தரின் மனைவி ஸ்தோத்திர பூர்ணாம்பிகையின் மற்றொரு பெயர் சொக்கியார் என்பதாக இங்குள்ள கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தியாகேசர் சன்னதிக்கு நேர் பின்னே முருகப் பெருமான் சன்னதி மற்றும் வடமேற்கில் அம்பாள் திருவெண்ணீற்றுமையம்மை சன்னதி அமையப் பெற்றிருக்கிறது.

அம்பாளே நேரில் வந்து விபூதி வழங்கியபோது, சம்பந்தர் அம்பிகையின் அடிபடிந்து வணங்கினார்.







அன்னையானவள் தாய்மை உணர்வுடன் திருஞானசம்பந்தருக்கு விபூதி அணிவித்து அருளாசி வழங்கினாள்.

அம்பாளே அதாவது ஆச்சாளே நேரில் வந்து விபூதி வங்கியதால் இத்தலம் ஆச்சாள்புரம்என்று வழங்கப்பட்டதோடு, அம்பாளுக்கு திரு வெண்ணீற்றுமையம்மை என்றும் பெயர் ஏற்பட்டிருக்கிறது.

இன்றும் அம்பாள் சன்னதியில் பக்தர்களுக்கு விபூதி மட்டுமே பிரசாதமாக வழங்கப்பட்டுவருவது எங்கும் இல்லாத ஆபூர்வம்!

உட்பிராகாரத்தில் தட்சிணாமூர்த்தி கலைநயத்துடன் காணப்பட, ருண விமோசன ஈஸ்வரர் தனி சன்னதியில் காட்சி தருகிறார்.

ருண விமோசனரை பதினொரு திங்கட் கிழமைகள் நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வறுமை விலகும்.

தீராக் கடன் தீரும் என்பது காலம்காலமாக இருந்துவரும் நம்பிக்கை. நாடெங்கிலும்இருந்து ஏராளமான பக்தர்கள் இந்த ஈஸ்வரன் மீது நம்பிக்கை வைத்து வந்து வணங்கிச் செல்கிறார்கள்.

ருண விமோசனருக்கு பத்து வாரம் அர்ச்சனையும் பதினோராவது வாரம் அபிஷேகமும், வயதிற்கேற்ற எண்ணிக்கையில் நெய்தீபமும் ஏற்றினால் அவர்களது வாழ்க்கையில் எல்லாத் தடைகளும் நீங்குமாம்.

அதேபோய் தேய்பிறை அஷ்டமியில் பதினெட்டு நெய்தீபங்களை ஏற்றி அர்த்தஜாம பூஜை வேளையில் இவரை வணங்கினால் பொன், வெள்ளி வாங்கும் யோகம் உண்டாகும் என்பதும் நம்பிக்கையாக இருக்கிறது.

இத்தலம் வந்த காக முனிவர், காலால் மிதிக்க அஞ்சி தலையால் நடந்திருக்கிறார். திருக்கோயிலை அடைந்து இறைவனை வணங்கிய அவரை நிருதி மூலையில் சிவயோகத்தில் ஆழ்ந்திருக்க கட்டளையிட்டார் பரமன்.

அதன்படி சிவயோகத்தில் ஆழ்ந்திருந்த இவரும் சம்பந்தரோடு சிவஜோதியில் கலந்து முக்தி பெற்றார்.


ஆலயத்தின் வெளிப்பிராகார தென்மேற்கு மூலையில் தல விநாயகரான மாவடி விநாயகர் வீற்றிருக்கிறார். இங்கு பால திருஞானசம்பந்தர், கல்யாண திருஞானசம்பந்தர் என இரண்டு உற்சவ மூர்த்திகள் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மூல நட்சத்திரத்தில் திருஞானசம்பந்தர் திருக்கல்யாண உற்சவம் மற்றும் ஈசனுடன் ஐக்கியமாகும் விழாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதேபோன்ற திருக்கல்யாண உற்சவம் தருமபுர ஆதீனம், மதுரை ஆதீனம் ஆகியவற்றிலும் நடைபெறுவது வழக்கம். ஊரின் பெயரான திருநல்லூர், கோயிலின் பெயரான பெருமணம் ஆகிய இரண்டும் இணைந்து திருநல்லூர் பெருமணம் என்று அழைக்கப்பட்ட தலம் தற்போது ஆச்சாள்புரம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

முருகப் பெருமானுக்கு சிவபெருமான் இத்தலத்தில் கயிலாயக் காட்சியைக் காட்டி அருளியதால் பரவசம் அடைந்த முருகன், ஆலயத்தை மூன்றுமுறை வலம் வந்து வணங்கினார். இதனால் இத்தலத்தை மூன்று முறை வலம் வந்து சிவன், அம்பாள், முருகன் ஆகியோரை வணங்கினால் சகல செல்வங்களும் நம்மை வந்தடையும் என்பது நம்பிக்கை....!!

# போர்களத்தில் உருவான மதம்



ஒரு மதத்தின் வரலாற்றை ஆராயும் போது அதை உருவாக்கிய ஆச்சார்யாவின் காலத்திலிருந்தே துவங்குவது வழக்கம் இது ஒரு சமயத்தில் சரியாக இருக்கலாம் ஆனால் எல்லா சமயத்திலும் சரியாக இருப்பது இல்லை. அதாவது சீக்கிய சமயம் உருவாகிய காலம் ஏறக்குறைய பதினைந்தாம் நூற்றாண்டு அல்லது பாதினாராம் நூற்றாண்டு என்று குருநானக்கின் பிறப்பை அடிப்படையாக வைத்து கணிக்க படுகிறது. சீக்கிய மதத்தை பொறுத்தவரை இந்த முறை சரியானது தானா? என்பதை மிக ஆழமாக சிந்திக்க வேண்டிய நிலை இருக்கிறது.

சிந்து நதி பாயும் இடத்தில் தோன்றிய நாக ரீகத்தை சிந்துசமவெளி நாகரீகம் என பெயரிட்டு அழைப்பது வழக்கம் அந்த நாகரீகம் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது இந்தியாவின் ஆதி நாகரீகம் அது தான் என்றும் வராலாற்று ஆய்வாளர்களால் சொல்ல படுகிறது. சிந்து வெளியில் தோன்றிய நாகரிகம் ஆரியர்களுக்கு சம்மந்தமில்லாதது ஆரியர்கள் இந்த நாட்டிற்குள் வருவதற்கு முன்பே உள்ளது திராவிடர்கள் அல்லது

முண்டர்கள் என்ற இனத்தாரின் நாகரீகம் அது என்றும் நம்பப்பட்டு வருகிறது. சிந்து நாகரீகம் வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடும் படி ஐயாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டது தானா? அதில் ஆரிய கலப்பு உண்மை யாகவே இல்லையா? என்பவைகள் எல்லாம் இன்று வரையிலும் பல வாதங்களை உருவாக்கிய வண்ணமே இருக்கிறது. நாம் அந்த வரலாற்று குழப்பங்களுக்குள் நுழைய வேண்டிய அவசியம் இல்லை. சிந்து பூமியில் அந்த நாகரீக சுவடு களின் வெளிதோற்றத்தை ஒரு சிறிது மட்டுமே பார்க்க போகிறோம்.

சிந்து நகரத்தின் வீடுகள் திட்டமிட்டு முறைப் படி வரிசையாக அமைக்கப்பட்டு இருந்ததும் அந்த வீடுகளில் நவீன நாகரீக வீடுகளை போலவே பல அறைகளும் குளியல் அறைகளும் கழிவு அறைகளும் இருந்ததாகவும் வீடுகளில் புழங்குகின்ற தண்ணீர் சரியான முறையில் பாதாள சாக்கடை வழியாக வெளியேற்ற பட்டதையும் அறிய முடிகிறது.

அவைகளில் மிகவும் முக்கியமான ஒரு சங்கதி இருக்கிறது. சிந்து நகரத்தின் மையபகுதியில் நீள்சதுர அமைப்பில் மிக பெரிய நீர்நிலை ஒன்று அதாவது தற்காலத்திய நீச்சல் குளம் போல அமைக்க பட்டிருந்தாகவும் அதில் அக்கால





மக்கள் பல சமய சடங்குகளை செய்ததாகவும் ஆராய்ந்தவர்கள் சொல்கிறார்கள்.

இதை அப்படியே மனதில் வைத்து தற்போதைய சீக்கிய கோவிலான பொற்கோவில் இருக்கும் இடத்திற்கு வருவோம். இங்கும் ஆலயத்தை சுற்றி தெளிவான சுத்தமான தண்ணீர் தேக்கபட்டுள்ளதை காண முடிகிறது. கண்களை மூடி நமது சிந்தனை தேரை சிந்து சமவெளி நாகரீக காலத்திற்கும் இப்போதைய பொற்கோவிலின் அமைப்பிற்கும் ஒரு பயணத்தை மேற்கொண்டோம் என்றால் பழைய சிந்து நாகரீகத்திற்கும் சீக்கிய மதத்திற்கும் ஒரு தொடர்பு நூலிழை போல இருப்பதை அறியலாம். இப்படி நான் சொல்வதற்கு மிக முக்கிய காரணங்கள் இருக்கிறது. சீக்கிய சமய வழிபாட்டில் நிலமும் நீரும் பின்னி பிணைந்துள்ளதை பார்க்கும் போது சீக்கிய மத தொடர்ச்சி குருநானக்கின் காலத்திற்கு முன்பே துவங்கியதாக எண்ணலாம். வேண்டுமானால் மக்கள் மனதில் நீருபூத்த நெருப்பாக புகைந்து கொண்டிருந்த இயற்கையோடு கலந்த இறைவழிபாட்டு முறையை மகான் குருநானக் சாம்பலை விலக்கி நெருப்பை தூண்டி விட்டார் என்று சொல்லலாம்.

பாரத திருநாட்டின் பூர்வகுடி மக்கள் வாழ்ந்த

e-magazine
aanmeegamalar.com



சிந்து நதி கரையின் மீது அடுக்கடுக்கான அந்நிய தாக்குதல்கள் ஒருமுறை அல்ல பலமுறை நிகழ்ந்தது. ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்தபோதும் சிந்துநதி ஓரமாக வாழ்ந்த மக்களை போரில் வென்றுதான் உள்ளே நுழைந்தார்கள். அவர்களுக்கு பிறகு வந்த யவனர்கள், ஹூணர்கள், சைத்தியர்கள், துருக்கியர், ஆப்கானியர், மத்திய ஆசியர் அனைவருமே பஞ்சாப்பின் செழுமையானமண்ணை மிதித்து இரத்த களரியாக்கிய பிறகே மற்ற பகுதிகளுக்குள் நுழைந்தனர். அதாவது நம் நாட்டின் மீது நடந்த ஒவ்வொரு படையெடுப்பையும் முதலில் அனுபவித்தது பஞ்சாப் மக்களே ஆவார்கள்.

தொடர்ச்சியான போராட்டங்களால் பண்பட்ட பஞ்சாப் பண்பாடு சீரழிந்தது. மக்களில் இனக் கலப்பு என்பது சர்வசாதரணமாக நடந்தது. எதிரிகளால் மட்டுமல்ல உள்நாட்டில் உள்ள பல மக்களும் பஞ்சாப் வயல்களின் செழுமையை கபளீகரம் செய்ய அப்பகுதியில் வலுகட்டாயமாக குடியேறினர். இதனால் ஆதி சிந்துமக்களின் இனமே முழுமையான கலப்படத்தை அடைந்து விட்டது. இதை பற்றி பல வடமொழி நூல்கள் விரிவாகவே சொல்கின்றன. ஒருகாலத்தில் இனக்கலப்பு ஏற்பட்ட பஞ்சாப் பகுதிகளுக்குள் சென்று வருவதே தீட்டு என்று கருதப்பட்டது. அங்கே சென்று வந்த பல வைதீகர்கள் தோடி என்ற பரிகாரத்தை செய்த பிறகே தங்களது கூட்டத்தாரோடு சேர்த்து கொள்ளபட்டார்கள். அந்த அளவு பஞ்சாப் மண் கற்பழிக்க பட்டது.

குப்தர் காலத்திற்கு பிறகு வடமேற்குபகுதிகளில் ஜைனம் பௌத்தம் போன்ற மதங்கள் மிகபெரிய செல்வாக்கை பெற்றது. தட்சசீல நகரத்தில் பௌத்த மதத்தை போதிப்பதற்காகவே தனி பல்கலைகழகம் இருந்தது. இவ்வட்டாரத்தில் சர்வாஷ்தி வாதம் என்ற பௌத்த பிரிவு தோன்றியது.

அது பஞ்சாப் பகுதியில் உள்ள மலைபிரதேசங்கள் வரை பரவியது. அப்பகுதில் சக்தி தேவியை வழிபடும் சாக்த பிரிவும் தாந்த்ரீக பிரிவும் பெரும் செல்வாக்கை பெற்றிருந்த போதும் புத்த மதம் மூக்கை நுழைப்பதற்கு எந்த தடையும் அங்கே இருக்கவில்லை புத்த மதமும் சாக்த மதமும் பஞ்சாப் மக்களின் மனநிலைக்கு ஏற்ற வாறு ஒரு புதிய வடிவத்தை அங்கே எடுத்தது என்றே சொல்லலாம். அதாவது புத்த மதத்தில் உள்ள ஆழமான அறிவு பகுதி சாக்தம் மற்றும் தாந்த்ரீக பிரிவுகளோடு. இரண்டற கலந்தன.

இன்று கூட சாக்தமத தாக்கத்திலிருந்து பஞ் சாப் முற்றிலுமாக விடுபடவில்லை என்றே சொல்ல வேண்டும். பஞ்சாப் மாநிலத்தின் தலைநகர் கூட சக்தி தேவியின் பெயராலையே அழைக்கபடுகிறது. அதாவது தேவியின் சண்டி

e-magazine
aanmeegamalar.com






என்ற திவ்விய நாமமே சண்டிகார் என்று விளங்கி வருகிறது.

புகழ் பெற்ற பல காளி கோவில்கள் அமிர்த தரஸ் நகர பகுதிகளில் இருக்கிறது. இதுவும் அல்லாமல் பஞ் சாப்பின் வடக்கே உள்ள சிம்லா என்ற நகரமும் சக்தி தேவியின் சியாமளா என்ற பெயரின் மறுவடிவமே ஆகும். சாக்தம் மற்றும் தாந்தீரிகம் விவசாய பகுதிகளை பின்புலமாக கொண்டது. எனவே பஞ்சாப் விவசாயிகளின் மனதை இவைகள் கவர்ந்ததில் வியப்பில்லை. அதே போல வீரசைவம் காஷ்மீர சைவம் என்பவைகளும் பஞ்சாப் மக்களின் உயிர் துடிப்பாக இருந்தது.

பத்தாம் நூற்றாண்டிருக்கு பிறகு வந்த சூபிய ஞானிகளின் இனிய தத்துவ பாடல்களும் நாதர் மரபு என்ற சித்தார்களின் வழிபாட்டு முறைகளும் கபீர் பந்தியினரின் செல்வாக்கும் பஞ் சாப் மக்களின் வாழ்க்கையோடு இணைந்து இருந்த போதே இஸ்லாமிய படையெடுப்புகள் அப்பகுதியில் மிக கொடூரமாக நடந்ததாலும் ஆயுத முனையில் பல அப்பாவிகள் இஸ்லாமியர்களாக மாற்ற பட்டதாலும் கள்ளம் கபடம் இல்லாத உழவர் பெருமக்களான பஞ் சாபியர் அரபு மதமான இஸ்லாமியத்தில் இருந்து கூட சில பகுதிகளை தங்களது வழிபாட்டுக்கு என்று எடுத்து கொண்டார்கள்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

சிந்து சமவெளி நாகரீகம் துவங்கி முஸ்லிம் படையெடுப்புகள் வரை எதற்காக சொல்கிறேன் என்றால் சீக்கியர் மத கருத்துகளுக்குள் இவைகள் அனைத்தும் செல்வாக்கு மிக்கதாக அடங்கி உள்ளது.

அதனால் சீக்கிய மதம் பதி னாறாம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு இளைய மதம் என்று கருத இயலாது அதற்கு சில ஆயிரம் ஆண்டுகள் பின்னணி உண்டு என்பதை வாசகர்கள் விளங்கி கொள்ளவே சிறிது தொட்டுகாட்ட வேண்டிய நிலை வந்தது. இனி சீக்கிய மதத்தின் உயிரான கொள் கைகளை சிறிது காண்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

aanmeegamalar.com



# மகா சிவராத்திரி என்றழைப்பதின் சிறப்பு என்ன?

மாதந்தோறும் தேய்பிறையில் வரும் சதுர்த்தசியை மாத சிவராத்திரி என்கிறோம். அதே சமயம் மாசி மாதம் வரும் சதுர்த்தசியை மகா சிவராத்திரி என்கிறோம். இரவுகளில் மிகவும் மகிமையும், சிறப்பும் வாய்ந்த இரவு என்பதால் மாசி மாத சிவராத்திரியை மகாசிவராத்திரி என் கிறோம்.

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

விஷ்ணுவை மகாவிஷ்ணு என்றும், லட்சுமியை மகாலட்சுமி என்றும், கணபதியை மகாகணபதி என்றும், முருகனை மகாசேனன் என்றும் மகா என்ற சொல்லை நேரிடையாக பயன்படுத்துவோம், ஆனால் ஈசனுக்கு மிகவும் விருப்பமான சிவராத்திரிக்கு இந்த மகா என்ற சிறப்பு அடைமொழியுடன் அழைக்கப்படுவதிலிருந்து மகா சிவராத்திரியின் மகிமை தெரியவருகிறது.

சிவபெருமானுக்கு கூட மகா என்ற அடைமொழியுடன் அழைப்பது கிடையாது, ஆனால் அவருக்கு உகந்த மாசி சிவராத்திரிக்கு இந்த மகா என்ற அடைமொழி உள்ளதால் இந்த சிவராத்திரியின் மகிமையை சொல்லித் தெரியவேண்டிய அவசியமில்லை.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!




நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

# ஆன்மிகமலர்
## மெயில் புக்



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










# aanmeegamalar.com

# இணையதளத்தை பார்க்கவும்











# மகா சிவராத்திரி தோன்றிய தலம்

aanmeegamalar.com

மகாசிவராத்திரி தோன்றியது திருவண்ணா மலை தலத்தில் தான் என்பது பலருக்கும் தெரியாத ரகசியமாக உள்ளது. இந்த நாளில் தான் கோடி சூரிய பிரகாசத்துடன் சிவபெருமான் லிங்க வடிவில் திருவண்ணாமலையில் தோன்றி னார் என்று புராணங்களில் குறிப்பிடப் பட்டுள் ளது.

இதன் பின்னணியில் ஒரு புராண நிகழ்வு சொல்லப்படுகிறது. விஷ்ணுவுக்கும் பிரம்மா வுக்கும் ஒரு தடவை தம்மில் யார் பெரியவர் என்ற சண்டை ஏற்பட்டது. அவர்களது சண்டை யைத் தீர்த்து வைக்குமாறு தேவர்கள் அனைவ ரும் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

அதை ஏற்று சிவபெருமான் மிகப்பெரிய நெருப்புப் பிழம்பாக விஷ்ணு, பிரம்மா இருவர் முன்பும் தோன்றினார் அந்த நெரு ப்புப் பிழம்பு மண்ணுக்கும், விண்ணுக்கும் பரவி மிகப் பிரமாண்டமாக காட்சி அளித்தது.

அந்த நெருப்புப் பிழம்பு விஷ்ணு, பிரம்மா இருவரிடமும் "எனது அடிமுடியை யார் முதலில் தொட்டு வருகிறீர்களோ, அவரே இந்த உலகின் பெரியவர் ஆவார்" என்றது. உடனே விஷ்ணு வராக (பன்றி) உருவம் எடுத்து அந்த நெருப்பு பிழம்பின் அடியை காண்பதற்காக பூமியை துளைத்துச் சென்றார்.

பிரம்மனோ அன்னப் பறவையாக மாறி, நெருப்புப் பிழம்பின் முடியை கண்டு வருகிறேன் என்று உயரே பறந்து சென்றார். பல ஆண்டுகள், யுகங்களாக முயன்றும் விஷ்ணு, பிரம்மா இரு வராலும் அந்த நெருப்புப் பிழம்பின் அடி, முடியை காண இயலவில்லை.

இது ஈசனின் செயலாகத்தான் இருக்கும் என்பதை உணர்ந்த விஷ்ணு, தனது முயற் சியை கைவிட்டு திரும்பி வந்தார். அவரிட ம் இருந்த ஆணவம் காணாமல் போய் விட்டது.

ஆனால் பிரம்மாவிடம் இருந்த அகந்தை மட்டும் நீங்கவில்லை. உயர பறக்க முடியாமல் சோர்வடைந்து திரும்பிக் கொண்டிருந்த பிரம்மா, ஒரு தாழம்பூவை பார்த்தார். அந்த தாழம்பூ ஈசனின் முடியில் இருந்து விழுந்து பல நூறு யுகங்களாக கீழே வந்து கொண்டிரு ப்பதை அறிந்தார்.

நெருப்புப் பிழம்பின் முடியை தான் கண்ட தாக பொய் சொல்ல வேண்டும் என்று அந்த தாழம்பூவிடம் பிரம்மா கேட்டுக் கொ ண்டார். தாழம்பூவும் அதற்கு சம்மதித்தது.

தரை இறங்கியதும் அந்த தாழம்பூ பொய் சாட்சி சொன்னது. அவ்வளவுதான். நெருப் புப் பிழம்பாக இருந்த சிவபெருமானுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அந்த நெருப்புப் பிழம்பில் இருந்து சிவபெருமா ன் வெடித்துக் கொண்டு லிங்க வடிவில் வெளியில் வந்தார்.

விஷ்ணுவுக்கும், தேவர்களுக்கும் கேட்ட வரங்களை எல்லாம் கொடுத்த சிவபெரு மான், பொய் சொன்னதற்காக பிரம்மாவுக்கு, பூமியில் கோவில் இல்லை என்றும், தாழம்பூவை பூஜைக்கு தகுதியற்ற மலரா வாய் என்றும் சாபமிட்டார்.

இந்த நிகழ்ச்சி நடந்தது திருவண்ணாம லையில் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் உலகில் திருவண்ணாமலையில் தான் முதன் முதலில் அக்னி தோன்றியது என்கிறார்கள். இந்த அக்னியில் இருந்து தான் சூரியன், சந்தி ரன் பிரகாசங்கள் மற்றும் தீப ஒளிகள் தோன் றின என்று புராணங்களில் எழுதப்பட்டுள்ளது.

இந்த அக்னியில் இருந்து வெளியில் வந்த சிவபெருமான் “லிங்கோத்பவர்” வடிவில் காட்சிக் கொடுத்தார். இதனால் திருவண்ணா மலையில்தான் முதன் முதலில் லிங்க வழி பாடு தோன்றியது என்பது உறுதியாகிறது. மாசி மாத சிவரா த்திரியன்று இந்த நிகழ்வு நடந்ததால், அது மகா சிவராத்திரி என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. ஆக, மகா சிவராத்திரி தோன்றிய தலம் திருவண்ணாமலையே..

திருவண்ணாமலையில் இருந்துதான் லிங்கோத்பவர் வழிபாடும், மகா சிவராத்திரி கொண்டாட்டமும் மற்ற தலங்களுக்கு பரவியது.







e-magazine
aanmeegamalar.com

# சிவராத்திரி பற்றி சுவாரஸ்யமான அரிய தகவல்கள்

e-magazine
aanmeegamalar.com



- சிவராத்திரி அன்றுதான் அன்னைஉமாதேவி சிவபெருமானை பூஜித்து வழிபட்டாள். அதனால், நாமும் அந்த தினத்தில் பூஜை செய்து சிவபெருமானை வழிபடுவது சிறந்த பலனைத்தரும்.
- சிவராத்திரி என்ற சொல் சிவனுடைய ராத்திரி, சிவமான ராத்திரி, சிவனுக்கு இன்பமான ராத்திரி என்று பல வகைப் பொருளை தருகிறது.
- சிவராத்திரி 4 ஜாமங்களிலும் ஒருவர் செய்யும் பூஜை, அவரை முக்தி பாதைக்கு அழைத்து செல்ல உதவும்.
- சூரியன், முருகன், மன்மதன், இந்திரன், எமன், சந்திரன், குபேரன், அக்னி பகவான் ஆகியோர் முறைப்படி சிவராத்திரி விரதம் இருந்து பேறு பெற்றுள்ளனர்.
- சிவராத்திரியன்று ஆலயங்களுக்கு செல்ல முடியாதவர்கள் வீட்டில் இருந்தபடியே சிவபெருமானுக்கு மனதில் அபிஷேகம் செய்து சிவனை வழிபடலாம்.
- எறும்பு, நாரை, புலி, சிலந்தி, யானை, எலி போன்றவை கூட சிவபூஜையால் மோட்சம் அடைந்துள்ளன.
- சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் தருபவர் என்று பொருள். எனவே எந்த அளவுக்கு ஒருவர் சிவ, சிவ.... என்று



உச்சரிக்கிறாரோ, அந்த அளவுக்கு அவர் நன்மை பெறுவார்.

- சிவராத்திரியன்று திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமியை வழிபட்டால் மறு பிறவி கிடையாது.
- சிவராத்திரி தினத்தன்று, தியாகராஜர் என்ற பெயரில் ஈசன் வீற்றிருக்கும தலங்களில் தரிசனம் செய்தால் பாவங் களில் இருந்து விடுபடலாம்.
- கஞ்சனூரில் ஒரே பிரகாரத்தில் அடுத் தடுத்து 2 தெட்சிணாமூர்த்திகள் உள்ளனர். சிவராத்திரியன்று இவர்களை வழிபட்டால், சிவஞானம் எளிதில் கிடைக்கும் என்பது நம்பிக்கை.
- சிவபெருமான் லிங்கமாக உருவெடுத்த தினமே சிவராத்திரி என்று ஒரு கருத்து உண்டு.
- திருவதிகை தலத்தில் உள்ள வீரட்டா னேஸ்வரரை சிவராத்திரி தினத்தன்று வழிபட்டால் ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்றும் நீங்கும்.
- பண்டரிபுரத்தில் உள்ள பாண்டு ரங்கன் சங்கர நாராயண வடிவம் என்பார்கள். பாண்டுரங்கன் தலையில் கிரீடத்துக்கு பதில் பாண லிங்கம் இடம் பெற்றுள்ளது. சிவராத்திரி தினத்தன்று பாண்டுரங்கனுக்கு நிவேதனம் செய்வதில்லை. அவரும் அன்று சிவராத்திரி விரதம் இருப்பதாக சொல்கிறார்கள்.
- மகா சிவராத்திரி தினத்தன்று அபிஷேகத் துக்கு உரிய பொருட்களை வாங்கி ஆலயத்துக்கு கொடுப்பவர்கள் பரமானந்த நிலையை அடைவார்கள் என்பது ஐதீகம்.
- ஊத்துக் கோட்டை அருகில் உள்ள சுருட்டப்பள்ளியில் மட்டுமே சயன கோலத்தில் ஈசன் உள்ளார். சிவராத்திரி தினத்தன்று அங்கு ஈசனை வெள்ளி அங்கியில் தரிசனம் செய்யலாம்.
- சிவராத்திரி தினத்தன்று சிவபுராணம், தேவாரம் மற்றும் திருமுறைகள் படிப்பது மிகவும் நல்லது.
- திருவைகாவூர் ஈசனை சிவராத்திரி தினத்தன்று வழிபட்டால், மரண பயம் நீங்கும்.
- கருட புராணம், கந்தபுராணம், அக்னி புராணம் உள்ளிட்ட பல்வேறு நூல் களில் சிவராத்திரி மகிமை பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது.
- சிவராத்திரி தினத்தன்று மாலை சூரியன் மறைந்ததில் இருந்து மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை சிவ பூஜை செய்பவர்களுக்கு எல்லா பாக்கியங்களும் கிடைக்கும்.
- ஒரு வருடம் சிவராத்திரி விரதம் இருப்பது என்பது நூறு அசுவமேத யாகம் செய்த பலனும், பல தடவை கங்கா ஸ்நானம் செய்த பலனும் தரவல்லது.
- சிவராத்திரியன்று கலச பூஜையுடன் லிங்கமும் வைத்து வழிபடுவது கூடுதல் பலன்களைத் தரும்.

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 176 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# நொய்டா கோவிலில் இரண்டு நாட்கள் நடைபெற்ற ராதா கல்யாண மஹோத்ஸவம்






e-magazine
aanmeegamalar.com

‘ராதா கல்யாண மஹோத்ஸவம்’ அவரது நாமங்களான ‘ராம, கிருஷ்ணா, கோவிந்தா, விட்டலா’ என்று கோஷமிடுவதன் மூலம், இரண்டு நாட்கள் நிகழ்ச்சி ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில், செக்டார் 62, நொய்டாவில் நடைபெற்றது. முப்பது ஆண்டு களுக்கும் மேலாக பக்தர்களுக்கு சேவை செய்து வரும் நொய்டாவின் வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் இந்த இரண்டு நாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.


எஸ்.வெங்கடேசன்

விக்னேஸ்வர பூஜை, ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், பந்தல் கால் முகூர்த்தம் (தெற்கு கல்யாண சம்பிரதாயத்தின் படி) ஆகியவற்றுடன் தெய்வீக நிகழ்ச்சி தொடங்கியது, நாமசங்கீர்த்தனம் தோடயமங்கலத்துடன் தொடங்கியது

அனைத்து தெய்வங்களையும் நமஸ்காரங்களுடன் அழைத்தல், குரு வந்தனம் அனைத்து குருக்களுக்கும், குறிப்பாக ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ போதேந்திராள், ஸ்ரீ ஸ்ரீதர வெங்கடேச (அய்யாவாள்), ஸ்ரீ மருதாநல்லூர் சத்குரு, மகா பெரியவா, ஸ்ரீ ஞானானந்தா, சாதுக்கள், சாதுக்கள், சாதுக்கள், சாதுக்கள். அஷ்டபதி எனப்படும் கீதா கோவிந்தத்துடன் ராதா







கல்யாணம் பிப்ரவரி 24ஆம் தேதி சனிக்கிழமை தொடங்கியது. புனித தீர்த்த நாராயண குரு, புனித பத்ராசல ராமதாஸ், ஸ்ரீ புரந்தரதாசர், ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர், ஸ்ரீ கோபால கிருஷ்ணா, புனித தியாகராஜர் ஆகியோரின் கிருதிகள் பாடலுடன் இரண்டு நாட்கள் நிகழ்ச்சி தொடர்ந்தது. இதைத் தொடர்ந்து தெய்வங்களுக்கும் பூஜை, தேவதா தியானம்,; தீப பிரதக்ஷணம் / திவ்யநாமம், டோலோத்ஸவம் (சயன உற்சவம்) விநாயகர் முதல் கிருஷ்ண சைதன்யர் வரை அனைத்து தெய்வங்களுக்கும் நடந்தன. இந்த மஹோத்ஸவம் விஎஸ்எஸ் பஜன் மண்டலி, நொய்டா நிகழ்த்தியது.

ராதா கல்யாண மஹோற்சவத்தின் ஒரு பகுதியாக, விஎஸ்எஸ் நொய்டாவின் குழு ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்யப் பட்டது. மேலும், திருமதி அம்பிகா ஸ்ரீகாந்த் தனது சிஷ்யர்களுடன் சேர்ந்து சத்குரு ஸ்ரீ தியாகராஜரின் பஞ்சரத்ன கிருதிகள் வழங் கினார்.

பிப்ரவரி 25ம் தேதி, ராதா கல்யாணம் தட்சிண சம்பிரதாயத்தின் படி, நிகழ்ச்சி நடந்தது, அதை தொடர்ந்து ஆஞ்சநேய உற்சவம், மங்களம், மகா தீபாராதனை, மகா பிரசாதம், வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. பக்தர்கள், இந்த தெய்வீக கல்யாண உற்சவத்தில் பங்கேற்க, அவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்க இது ஒரு சிறந்த தெய்வீக வாய்ப்பாக நிரூபிக்கப்பட்டது.

கோவில் பராமரிப்பு பணியாளர்கள் தவிர, நன்கொடையாளர்கள், ஸ்பான்சர்கள், தன்னார் வலர்கள், கமிட்டி உறுப்பினர்கள், அனைவருக்கும் வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்தனர். அனைத்து பூஜைகளும் விபிஸ் ஆஸ்தான குருக்கள்:

ஸ்ரீ சங்கர் மற்றும் ஸ்ரீ ஸ்ரீராம் ஆகியோரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், கோவில் வாத்தியார்களான மணிகண்டன் சர்மா மற்றும் மோஹித் மிஸ்ரா, ஆகியோரின் உதவியுடன் செய்யப்பட்டன. நொய்டா மற்றும் டெல்லி, இந்திராபுரம், காஜியாபாத் ஆகிய அண்டை பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் இந்த இரண்டு நாள் மஹோத்ஸவத்தில் கலந்து கொண்டனர்.


– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370










e-magazine
aanmeegamalar.com

# சிவராத்திரியும் சுவாரஸ்ய தகவல்களும்

e-magazine
aanmeegamalar.com

- சிவனை காலை வணங்கினால் நோய் தீரும்.
- பகலில் வணங்கினால் விருப்பங்கள் நிறைவேறும்.
- இரவில் வணங்கினால் மோட்சம் கிட்டும்.
- சிவ சிவ என்று சொன்னால் போதும் துன்பங்கள் எல்லாம் திசை தெரியாமல் போகும்.
- சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் தருபவர் என்று பொருள். சிவபெருமான் லிங்கமாக உருவமெடுத்த தினமே சிவராத்திரி ஆகும்.
- நமசிவாய என்னும் மந்திரத்தை மனதில் நினைக்க எந்த தீமைகளும் நெருங்காது. ஒரு வருடம் சிவராத்திரி விரதம் இருந்தால் நூறு அசுவமேத யாகம் செய்த பலனும், பல தடவை கங்கா ஸ்நானம் செய்த பலனும் கிடைக்கும்.
- சிவனை அதிகாலையில் வணங்கினால் நோய்கள் தீரும். பகலில் வணங்கினால் விருப்பங்கள் நிறைவேறும். இரவில் வணங்கினால் மோட்சம் கிடைக்கும்.
- மாத சிவராத்திரி விரத வழிபாட்டின் முக்கியமான ஆறு அம்சங்கள்:
- சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தல் வேண்டும். இது ஆன்மாவைத் தூய்மைப் படுத்து தலை குறிக்கும்.
- லிங்கத்திற்கு குங்குமம் அணிவித்தல் நல்லியல்பையும், நல்ல பலனையும் வழங்கும்.
- நைவேத்தியம் கொடுத்தல் நீண்ட ஆயுளையும், விருப்பங்கள் நிறைவேறும் என்பதையும் குறிக்கும்.
- தீபமிடுதல் செல்வத்தை வழங்கும்.
- எண்ணெய் விளக்கேற்றுதல் ஞானம் அடைதலைக் குறிக்கும்.
- வெற்றிலை அளித்தல் உலக இன்பங்களில் திருப்தியைக் குறிக்கும்.



## ஐந்து சிவராத்திரிகள்

**வருஷ சிவராத்திரி:** மகா சிவராத்திரி மாசி மாத தேய்பிறை சதுர்த்தசி நாளே மகா சிவ ராத்திரியாகும். இந்த சிவராத்திரிக்கு “வருஷ சிவராத்திரி” என்ற பெயரும் உண்டு.

**யோக சிவராத்திரி:** திங்கட்கிழமையன்று சூரிய உதயம் முதல் இரவு முழுவதும், அதாவது பகல், இரவு சேர்ந்த அறுபது நாழிகை (இருபத்தி நான்கு மணி)யும் அமாவாசை இருந்தால் அன்று யோக சிவராத்திரி ஆகும்.

**நித்திய சிவராத்திரி:** வருடத்தின் பன்னிரெண்டு மாதங்களிலும் வரும் தேய்பிறை, வளர்பிறை சதுர்த்தசி திதி இடம் பெறும் இருபத்தி நான்கு நாட்களும் நித்திய சிவராத்திரி ஆகும்.

**பட்ச சிவராத்திரி:** தை மாத தேய்பிறை பிரதமை அன்று தொடங்கி, பதின்மூன்று நாட்கள் தினந்தோறும் முறைப்படி ஒரு வேளை உணவு உண்டு, பதினான்காம் நாளான சதுர்த்தசி அன்று முறைப்படி விரதம் இருப்பது பட்ச சிவராத்திரி எனப்படும்.

**மாத சிவராத்திரி ;** மாதந்தோறும் அமாவாசைக்கு முன்தினம் வரும் சதுர்த்தசி திதியில் வருவது மாத சிவராத்திரி ஆகும்.

எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி, செல்: 9750333265





e-magazine
aanmeegamalar.com

# அக்னீஸ்வரர் அனுமதியுடன்

# ஜீவசமாதியான நெரூர் சதாசிவபிரும்மேந்திரர்

## செய்வினை போக்கும் முருகன்

ஊழ்வினையால் மனிதர்கள் பலர் இன்று பல துன்பங்களால் உழல்கின்றனர். அதில் மிகவும் கொடுமையானது, மாந்தரீகத்தால் ஏற்படும் செய்வினை போன்ற கோளாறுகள். இவற்றினால் பலர் பல சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அத்துன்பங்களிலிருந்து. விடுபடுவது எப்படி? என்று கேட்பவர்களுக்கு அருமருந்தாக திகழ்கிறது நெரூர். இங்கு குடிகொள்ளும் குமரனை வழிபட செய்வினைக் கோளாறுகள் நீங்குவதாக நம்பப்படுகின்றது.

ஆறுமுகப்பெருமான் சூரபத்மனைக் கொன்ற பாவம், பிரம்மஹத்தி தோஷமாகச் சூழ்ந்தது. இதனால் தேவர் உலகை அடைய முடியாமல் போனது.

வழிபடுவோர் யாராகினும் விமோசனம்தந்தருளுபவர் விஸ்வேஸ்வரரே.... கந்தனும் தனக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி நீங்கிட... முதலில் திருமுருகன் பூண்டியில் தனது சக்திவேலால் தீர்த்தம் உண்டாக்கி, லிங்கம் ஸ்தாபித்து பரமனை



மனங்குளிர பூஜிக்கின்றார். ஆயினும், விட்டு விலகவில்லை ஹத்தி தோஷம்.

நாரதரின் ஆலோசனைப்படி, கொடுவினைத் தீர... கொடுமுடி நாடினார். மகுடேஸ்வரரை மலர்கள் கொண்டு மனம் ஒன்றி மகிழ்விக்கின்றார். தீரவில்லை துன்பம். மனம் வருந்தினார் மால்மருகன்.

மீண்டும் நாரதரை நாடி வந்து, நடந்ததைக் கூறினார். நாரதரின் கூற்றுப்படி... மகனூர் என்னும் மோகனூருக்கு எதிர் கரையில் காவிரி நீர் கொண்டு கலசங்கள் நிறுவினார். பிரம்மனது துணைகொண்டு சிவாகம முறைப் படி சிவயாகம் நடத்தினார்.

அந்த யக்ஞத்தினால் குளிர்ந்த யக்ஞேஸ்வரர்... தோன்றி, ஞானஸ் கந்தரின் தோஷம் போக்கி சந்தோஷம் அளித்தார்.

நெருப்பினிலிருந்து தோன்றியதால் இத்தள பெருமான் ஸ்ரீ அக்னீஸ்வரர் என்று அழைக்கப்பெற்றார். யக்ஞம் வளர்த்த இடமாதலால் நெருப்பூர் என்று ஆனது இத்தலம். அது மருவி நெருவூர் ஆகி, தற்போது நெரூர் என்று வழங்கப் படுகிறது.

இவ்வாலயத்திற்கு இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் புதுக்கோட்டை சமஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரரது ஜீவசமாதி அமைந்துள்ளது. கரூர் மாவட்டத்தின் முக்கிய இடமாக திகழ்கிறது இந்த அதிர்ஷ்டாணம்.

சதாசிவ பிரம்மேந்திரர் இத்தல அக்னீசப் பெருமானை வழிபட்டு, அவரது அனுமதி பெற்ற பின்னரே இங்கு ஜீவசமாதி அடைந்த தாக அவரது வரலாறு எடுத்துரைக் கின்றது.



மோ.கணேஷ்

அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய திருத்தலங்களுல் ஒன்றாகத் திகழும் இவ்வாலயத்தை விஜயாலய சோழனது பேரனான முதலாம் பராந்தக சோழன் கற்றளியாக [கல் கோவிலாக ] அமைத்துள்ளான்.

ஆலயம் காவிரி ஆற்றங்கரையில் இல்லாமல் சற்று உட்புறமாக ஊரின் வடபகுதியில் அமைந்துள்ளது. ஆலயத்தை ஒட்டி காவிரியில் இருந்து பிரிந்து ஓடும் ஓடை ஒன்று

e-magazine
aanmeegamalar.com

உள்ளது. 1200 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலயம் முற்றிலுமாக சிதைந்த காரணத்தால், பழைய இறை சிற்பங்களைக் கொண்டு புதிய கருங்கல் ஆலய திருப்பணி நடந்து வருகின்றன. கோபுரங்கள் முதற்கொண்டு அனைத்தும் கருங்கல்லால் உருவாக்கப்படுகின்றன.

முதலில் கிழக்குமுக சன்னிதியில் அருள்பாளிக்கின்றார் ஸ்வாமி ஸ்ரீ அக்னீஸ்வரர். சுயம்பு மூர்த்தம் என்பதற்குச் சான்றாக லிங்கத்தில் ஒழுங்கான உருவ அமைப்பினை காண முடியவில்லை. அந்த அளவிற்கு இந்த லிங்கத் திருமேனியில் பழமையும், விசித்திரமும் நிறைந்துள்ளது. ஸ்வாமி சன்னிதிக்கு இடப்புறம் ஸ்ரீ ஷண்முகரின் தனி சன்னிதி அமைந்துள்ளது.

கருவறையுள் கருணை வடிவான வடிவேலன் ஆறுமுகங்களும், பன்னிரு கரங்களும் கொண்டு, சாந்த ரூபியாக திருக்காட்சி தந்தருளுகின்றார். அருள் ததும்பும் திருருமுகம். மனம் குளிரும் தரிசனம்.


ஆறுமுகப்பெருமான் இங்கு அப்பன் ஈசனுக்கும், அம்மை ஊமைக்கும் நடுவில் வீற்றெழுந்து சோமாஸ்கந்த தரிசனத்தை அருளிக் கொண்டிருக்கின்றார். சூரனைக் கொன்ற பாவம் தீர கந்தன் இங்கு ஈசனை பூஜைக்கும் சமயம் அவருக்கு திருமணம் ஆகவில்லை. அதன் காரணமாக இங்கு வள்ளி மற்றும் தெய்வானை ஆகிய தேவியர்கள் இல்லாமல் தனித்து தரிசனம் தருகின்றார்.

கந்தனுக்கு இடப்புறமாக அடுத்த சன்னிதியில் இரு கரங்களுடன் திருவருள் பொழிகின்றாள் அன்னை ஸ்ரீ சௌந்தரநாயகி. பெயருக்கு ஏற்றார்போல் அழகில் குறைவின்றி, புன்முறுவல் பூத்தவளாய், நம்மை வரவேற்று அருள் புரிகின்றாள்.

மிகவும் அற்புதமான கலை படைப்புகளாகத் திகழும் இவ்வாலய கோஷ்ட தெய்வங்கள் பாலாலயம் செய்யப்பட்டு, தனியாக பாதுகாக்கப்பட்டுள்ளனர். இவ்வாலயய தக்ஷிணாமூர்த்தி, ஆதி சாஸ்தா மற்றும் ஸ்ரீ காலபைரவர் ஆகிய சிற்பங்களை கண்களில் ஒற்றிக்கொள்ளலாம். அவ்வளவு அழகான படைப்புகள். இத்தலத்தின் தீர்த்தமாக காவிரியும், தல விருக்ஷமாக வில்வமும் திகழ்கின்றன.

பல வருடங்களாக இவ்வாலய கருங்கல் திருப்பணி நடைபெற்று வருவதால், பெருவிழாக்கள் ஏதும் நடைபெறவில்லை. இருப்பினும், வருடா வருடம் ஆடி மாதத்தில் தவில் மற்றும் நாதஸ்வர கலைஞர்களால் நடத்தப்படும் நாத உற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

ஒருவரது ஜாதகத்தில் காணப்படும் சனி குரு சேர்க்கை மற்றும் பார்வையினால் ஏற்படும்




பிரம்மஹத்தி தோஷம்....இத்தல வழிபாட்டால் நீங்கும் என்பது உறுதி. அதோடு, தீராத வியாதிகள் நீங்கவும், திருமணத்தடை குழந்தையின்மை மற்றும் வியாபாரத் தடை ஆகியன நீங்கவும் இங்கு முருகனுக்கு அபிஷேகம், அர்ச்சனை செய்து பலனடைகின்றனர் பக்தர்கள். செய்வினைக் கோளாறு மற்றும் துஷ்ட சக்திகளால் ஏற்படும் தொல்லைகளும் இத்தல வழிபாட்டால் நீங்குகிறது என்கின்றனர் கந்தனது அடியார்கள்.

கரூர் மாவட்டத்திலுள்ள இந்த ஊர் கரூர் திருமுக்கூடலூர் சாலையில் தனியாக நெரூருக்கு சாலை பிரிந்து செல்கிறது. கரூரிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது நெரூர்.

பழங்காமூர் மோ கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

e-magazine
aanmeegamalar.com



# சிவராத்திரியும் சூட்சுமத்தை விளக்கும் வேடன் கதையும்

வாரணாசியில் சுஸ்வர என்ற பெயருள்ள ஒரு ஏழை வேடன் இருந்தான். ஒரு சிறிய குடிலில் மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்த அவன் காட்டில் வேட்டையாடி கிடைக்கும் பறவை விலங்கு ஆகியவற்றின் மூலம் தனது குடும்பத்துக்கு உணவளித்து வந்தான்.

ஒருநாள் அவன் வேட்டைக்குப் போன போது பல சிறிய விலங்குகளும் பறவை களும் அவனது வேட்டையில் சிக்கின. வேட்டையால் கிடைத்தவற்றை ஒரு சாக்குப் பையுள் போட்டவனாக மேலும் விலங்குகள் கிடைக்கக்கூடும் என்ற ஆசையில் காட்டின் உட்பக்கத்திற்குச் சென்று விட்டான். நீண்ட நேரம் காட்டில் அலைந்து திரிந்ததால் இருள் சூழ ஆரம்பித்தது. இந்நிலையில் அடர்ந்த காட்டுக்குள் இருந்து வெளியே வரும் வழியை அவனால் அறிய முடியவில்லை.

கொடிய விலங்குகள் அந்தக் காட்டில் இருந்ததால் அவன் தனது பாதுகாப்புக் குறித்து கவலையுற ஆரம்பித்தான். வேறு வழி அறியாத நிலையில் பாதுகாப்பு கருதி ஒரு மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டான். அவனது மணத்தால் கவரப்பட்ட விலங்குகள் மரத்தின் கீழ் வந்து கூடத் தொடங்கின. கீழே நின்ற விலங்குகளை விரட்டலாம் என்ற நம்பிக்கையில் மரத்திலிருந்து சில சிறிய கொப்புகளை முறித்து அவற்றின் மீது எறிந்தான். அவை அகலவில்லை. இரவு முழுவதும் மரத்தைச் சுற்றியபடி நின்றன. எனவே மரத்திலேயே இரவைக் கழிக்க எண்ணி தூங்கி கிழே விழுந்துவிடாதிருக்க இலைகளைப்

பறித்துக் கீழே வீசியபடி இருந்தான்.

விடிந்ததும் மிருகங்கள் அகன்று சென்று விட்டன. அவன் வேட்டைப் பொருட் களுடன் வீட்டுக்குச் சென்றான். சிறிது காலத்தின் பின்னர் அவன் இறந்த போது அவனுக்கு மோட்சம் கிடைத்ததாக கதை முடிகிறது.

அவன் அன்று இரவு அவன் மிருகங்களுக்கு பயந்து ஏறியிருந்த மரம் வில்வ மரம் என்றும் அவன் இலைகளைப் பறித்துக் கீழே போட்ட போது மரத்தின் அடியில் இருந்த சிவலிங்கத்துக்கு மேலே அவை வீழ்ந்தன என்றும் கூறப்படுகிறது. இவ்வாறாக நித்திரை விழித்து வில்வம் இலைகளைப் போட்டதாலும் அன்று சிவராத்திரி என்பதாலும் அவனுக்கு மோட்சம் கிடைத்தது என்பது கதையில் கூறப்பட்ட முக்கியமான செய்தி.

சிவனுக்கு மிகவும் உகந்தது வில்வம் என்றும் அந்த மரத்தில் மகாலஷ்மி வாசம் செய்கிறாள் என்றும் ஒரு வில்வ மலர் ஒரு லட்சம் தங்க மலர்களுக்கு நிகரானது என்றும் சிவபுராணம் கூறுகிறது. ஒரு வில்வம் இலையை ஈசனுக்கு போட்டு பூசிப்பதன் மூலம் சகல பாவங்களும் நிவர்த்தியாகிறது என்றும் வில்வ மரத்தை வீட்டில் வளர்ப்பதன் மூலம் அஷ்வமேத யாகம் செய்த பலனையும் ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலனையும் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய, சிவ தலங்களைத் தரிசித்த பலனையும் அடையலாம் என்றும் மேலும் வில்வத்தின் பெருமை கூறப்படுகிறது.

மேலே கூறப்பட்ட கதை ஒரு உருவக கதையாகும். அதன் ஒவ்வொரு அம்சத்திற்கும் ஆன்மிக ரீதியில் விளக்கம் கொடுக்கப்படுகிறது.

வேடன் காட்டு மிருகங்களை வேட்டையாடியதைப் போல ஆன்மிக வழியில் போக விரும்புபவர்கள் காமம், கோபம், பேராசை, ஒரு பொருளில் அல்லது மனிதரில் அளவில்லாத ஆசை வைத்தல், பொறாமை, வெறுப்பு ஆகிய விலங்கு குணங்களைக் கொல்லுதல் வேண்டும்.

காடு என்பது வேண்டத்தகாத எண்ணங்கள் மனதில் அலைந்து திரிவதைக் குறிப்பதாகும்.

வேடனின் பெயர் சுஸ்வர. அதன் கருத்து இனிய ஸ்வரம் அதாவது இனிய இசை என்பதாகும். இந்த பெயர் எண்ணங்களினதும் பேச்சினதும் தூய்மையை அதாவது மனத் தூய்மையைக் குறிக்கிறது.

வேடன் வாரணாசியில் பிறந்து வாழ்ந்தவன். வார என்பது நெற்றி, நாசி என்பது மூக்கு. மூக்கும் நெற்றியும் சந்திக்கும் இடம் வாரணாசியாகும். அந்த இடத்தில் இட, பிங்கள, சுசும்ன என்ற



மூன்று நாடிகள் சந்திக்கின்றன. ஒருவர் தனது மனத்தை அந்த இடத்தில் குவியச் செய்வாராயின் படிப்படியாக அவர் தனது புலன்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்கிறார்.

வில்வ மரம் முள்ளந் தண்டைக் குறிக்கிறது. வில்வ மரத்தின் இலைகள் விசேட அமைப்பைக் கொண்டுள்ளன. ஒரு தண்டில் மூன்று இலைகள் உள்ளன. அவை முன்னர் குறிப்பிட்ட மூன்று நாடிகளைக் குறிக்கின்றன. மரத்தில் ஏறுதல் என்பது மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியை ஆக்ஞ சக்கரத்திற்கு ஏற்றுவதைக் குறிக்கின்றது.

நித்திரை கொள்ளாது விழித்திருத்தல் என்பது ஒருமைத் தன்மையையும், உள்ளார்ந்த விழிப்பையும் குறிப்பதுடன், ஆன்மிகத்தை விரும்பும் ஒருவர் அடைய வேண்டிய இலக்கு என்பதையும் சுட்டி நிற்கிறது. அவர் ஒரு நிமிடம் கூட அசட்டையாக இருக்க முடியாது.

சிவன் என்பவர் நடத்தல், கனவு காணுதல், ஆழ்ந்த நித்திரை கொள்ளுதல் என்ற மூன்று நிலைகளையும் பிரகாசமாக்கி மிக உயர்ந்த உணர்தலைக் குறித்து நிற்கிறார். மூன்று இலைகளைக் கொண்ட வில்வத்தை சிவனுக்கு அளித்தல் என்பது மூன்று நிலைகளையும் கடந்து நான்காவது நிலையாகிய துரிய நிலையை அடைதலைக் குறிக்கிறது.

– எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி, செல். 9750333265

e-magazine
aanmeegamalar.com

# மனதில் சந்தேகத்துடன் கும்பிட்டால் கடவுள் வரமாட்டான்

e-magazine
aanmeegamalar.com

சீடன்: பலன்களை எதிர்ப்பார்க்காமல் இருந் தால்?

ஞானி: பற்று விட்டுவிடும்.

சீடன்: பற்று விட்டுவிட்டால்.

ஞானி: பயன் கிட்டிவிடும். கடவுளே வருவான்.

சீடன்: சற்று குழப்பமாக உள்ளதே?

ஞானி: (சிரித்தபடி) கேள்வி கேட்டே ஞானத்தை அடைய முடியாது. குருவிடம் சரணடை. மார்க்கம் புரியும்.

சீடன்: அது எப்படி?

ஞானி: நமக்குள்ளே சுவாமி சிரிப்பது தெரியும்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்

சீடன்: உணர முடிவதில்லையே?

ஞானி: உயிருக்கு தான் தேகத்தினிடத்திலே அதிகப் பற்று, மன துக்கு அவ்வளவு பற்று இல்லை. அதனால் அது அடிக்கடி ஓடிப் போகிறது. அதை ஓடாமல் கட் டுப்படுத்த பக்தி செய். இறைவன் சிரிப்பது தெரியும்.

சீடன்: மகான்களுக்கு இது எளிதாக உள்ளதே?

ஞானி: மகானும் உன்னைப் போல மனிதன் தானே. ஆனால் எப்பொழுதும் கடவு ளையே பொருட்படுத்திக் கொண்டிருப்ப தால் உலக விஷயங்களில் சலனம் ஏற்படாது.

சீடன்: ஞானிகளின், மகான்களின் உலக, தேக விஷயங்கள்?

ஞானி: விட்டவர்களுக்கு தான் கடவுளின் விளையாட்டு புரியும். ஞானி களின் தேக, உலக அபிமானத்தை ஆண் டவன் ஏற்கிறான்.

சீடன்: இது சராசரி மனிதனுக்கு வருவதில்லை, வரப் போவ துமில்லை?

ஞானி: அப்படிச் சொல்லாதே. வராததால் நாம் பாபிகள் என்று அர்த்தமில்லை. புண்ணியத்தை சேர்க்கத் துவங்கவில்லை அவ்வளவுதான்.

சீடன்: எங்களை உற்சாகப்படுத்த எளிமையாக் குகிறீர்கள்?

ஞானி: அப்படியல்ல. உங்களில் அநேகம் பேருக்கு ஆசை இருக்கிறது. அது அனு பவமாகும்போது அது சரி ஆகிவிடும். அதற்கு பக்தி செய்யத் தொடங்கு.

சீடன்: மந்திரம் என்றால் என்ன?

ஞானி: உருவத்தை எடுத்துக் காட்டும் சொல்லே மந்திரம்.

சீடன்: அது ஏன் முக்கியமானது?

ஞானி: பெரிய வியாக்கியானங்கள் மனதை மாற்றாத நிலையில் சிறிய நாமாக்களை இராமா, முருகா என்பதே மனதை மாற்றுவதால் அவை முக்கியம்.

சீடன்: இந்த மந்திரம் தான் நமக்கு என்று எப்படி தெளிவாகும்?

ஞானி: ஏதாவதொரு சொல் தான் சீடனுக்கு மந்திரம் என்பதால் ஞானிகளின் ஆயி ரக்கணக்கான வார்த்தைகளைக் கேட்க வேண்டும் சீடன்.

சீடன்: மந்திரத்தின் அர்த்தம் விளங்க வேண்ட ாமா?



ஞானி: பக்தியுடன் பார்த்தால் ஒரு சொல்லுக்கு நூறு அர்த்தங்கள் புரிந்து இலக்கணமே இலக்கியம் ஆகிறது.

சீடன்: மந்திரங்களின் உயர்வு என்ன?

ஞானி: அனுபவம் இல்லாமல் மந்திரத்தை சொல்வதனால் பலனும் கிடைப்பதில்லை, சலிப்பும் ஏற்படுகிறது.

சீடன்: புராணங்களின் உபயோகம் என்ன?

ஞானி: இராமாயணமும், சிவபுராணமும் அறிவைத் தருகிறது. இராமா, சிவா என்ற மந்திரங்கள் தான் நம்மை மாற்றி ஞானத்தைத் தருகிறது.

சீடன்: இதை ஆத்திகன் என்பவன் நம்ப வேண்டும் அல்லவா?

ஞானி: நிச்சயமாக. ஆனால் யார் கூப்பிட்டாலும் சுவாமி வரவே மாட்டான் என்பது ஆத்திகர்கள் எனப்படும் மனிதர்களின் உண்மையான நம்பிக்கை.

சீடன்: பக்தனின் வளர்ச்சியில் முதல் கட்டம் எது?

ஞானி: சந்தேகத்துடன் கூப்பிட்டால் கடவுள் வரமாட்டான். பெயர் உள்ளவனைக் கூப்பிட்டால் எப்படி வருவா னோ அப்படி கடவுளும் வருவான் என்ற சகுண உபாசனை யில் இலக் கணத்துக்கு எடுத்துக்காட்டாக இருப்பதே பக்தனின் முதல் படி.

சீடன்: இந்த காலத்தில் எதற்கும் சிபாரிசு தேவைப்படுகிறதே? இறைவனின் நிலை என்ன, இந்தப் பிரச்சினையில்?

ஞானி: கடவுளை சேர்த்துக்கொள்ளாத இடத்தில் உலக வழக்குதான் நடைபெறும். பாட்டு, சித்திரம், பக்தி, ஞானம் இவைகளில் சத்தியம் இருந்தால் தான், கடவு ளின் அருள் இருந்தால் தான் தேர்ச்சி பெறுவாய்.

சீடன்: கடவுளுக்கு கடவுள், மனிதனால் தகராறு வருகிற தே?

ஞானி: நம்முடைய கடவுளையே நாம் பலம் என்று எண்ணாத தால் தான் அடுத்த கடவுளை நாம் சாடுகிறோம். உன் கடவுளின் உண்மையான பலன் உனக்கு தெரிந்த வுடன் எல்லா கடவுளும் ஒன்றே என்று உணருவாய்.

சீடன்: பக்தர்களுக்குள் இந்த வேற்றுமை உண்டாவது இல் லையா?

ஞானி: பக்தர்கள் முழுமையான மனிதர்கள், இந்த வேற்று மையை கடந்தவர்கள். ஒரு சாஸ்திரமோ, ஒரு கடவுளோ வேற்றுமையை யாரிடமாவது உண்டு பண்ணினால் அதை அவர்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று பொருள். புரிந்த மனிதர்கள் இதை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். இதுவே பக்தி இலக்ஷணம்.

சீடன்: சில தீவிர பக்தர்கள் இந்த இலக்ஷணத்தை சட்டத்தை உடைத்திருக்கிறார்களே?


ஞானி: பக்தர்களும், ஞானிகளும் இறைவன் சட்டத்தை என்றும் புறக்கணித்தவர்கள் அல்ல.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்
ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு கொள்ளவும்
9444228203



e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

பஜன்மண்டலியினர்,

ஆன்மிக சேவை செய்யும் அன்பர்கள்,

ஆன்மிக அமைப்புகள், உழவாரப்பணி,

கோவில் திருவிழாக்களில் சேவையாற்றும் அன்பர்கள்,

அன்னதானம் செய்பவர்கள்,

பல்வேறு ஆன்மிகபணி செய்யும் ஆன்மிக அன்பர்கள்

மேற்கண்ட ஆன்மிக பணியை விரும்பி செய்யும் அன்பர்கள் தங்களைப் பற்றியும், தங்களது சேவையைப் பற்றியும் எங்களுக்கு தெரியப்படுத்தவும், தாங்கள் செய்யும் சேவையை புகைப்படத்துடன் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்,

உங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்பும் அன்பர்களுக்கு நமது ஆன்மிகமலர்.காம் இணையதளமும், இணையதள இதழும் பாலமாக செயல்படும்,

கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு தெரியப்படுத்தவும், அல்லது தொடர்பு கொள்ளவும்.

வாட்சப் எண்: 9444228203

## பூர்வஜன்ம பாவம் நீக்கி, தோஷ நிவர்த்தி செய்து, புத்திர பாக்கியம் அருளும்

# தென்காசி விஸ்வநாதர்





தென்காசி காசி விஸ்வநாதர் திருக்கோவில், இங்கிருந்து பொதிகை மலை அடிவாரத்தில் தென்றல் வீசும் குற்றால அருவி 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.


இந்த தலத்தில் காலடி எடுத்து வைத்தவுடனே மூலிகை நறுமணம் நம்மை வரவேற்கும். இது கேரள நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்குள் வரும் நுழைவு வாயில். இந்த கோவில் ஆயிரம் வருட பாரம்பர்யம் கொண்டது. இதன் சிற்ப வேலைப் பாடுகள் அதிசயத்தக்க வகையில் உள்ளது.

தென்காசி மாவட்டத்தில் உள்ள இத்திருத் தலத்தில் ஈஸ்வரன் சுயம்புவாக எழுந்தருளி இருப்பது மிகவும் விசேஷம் என்கின்றனர். வடக்கே காசியிலுள்ள விஸ்வநாதரை தரிசித்த பலனும், சக்தியும் இங்குள்ள ஈஸ்வரனை தரி சித்தால் கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

இங்குள்ள அம்மனின் பெயர் உலகம்மன் என்பது ஆகும். இந்த கோவில் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்பதை கோவிலில் உள்ள கல்வெட்டுகள் மூலம் அறியப் படுகிறது.

இந்த இடத்தை முன்பு ஆட்சி புரிந்த பராக்கிரம பாண்டிய மன்னன் தீர்த்த யாத்திரையாக வடக்கே உள்ள காசிக்கு புறப்படத் தயாரானார். அன்று இரவு அவரது கனவில் சிவபெருமான் தோன்றி, பக்தனே! என்னைக் காண பல நூறு கல் கடந்து பயணம் செய்வதற்கு பதிலாக இங்கேயே ஒரு கோவில் எழுப்பினால், நான்

e-magazine
aanmeegamalar.com



aanmeegamalar.com

வந்து அருள் புரிகிறேன்.

என் சன்னிதானம் அமையும் இடத்தை உன் அரண் மனையின் வாசலில் உள்ள எறும்புக் கூட்டம் வழி காட்டும்" என்று கூறி மறைந்தார். சுயம்புவாக சுவாமி தோன்றினார்.

மன்னர் விழித்து எழுந்து அரண்மனை வாசலுக்கு சென்று பார்த்தபொழுது, முன்பு காணாத எறும்பு கூட்டம் சாரை, சாரையாக, சென்றது. அதைப் பின் தொடர்ந்து செல்கையில் சிற்றாறு நதிக்கரையில் செண்பக மரங்கள் அடர்ந்த காட்டில் ஒரு எறும்பு புற்று இருந்தது.

அத்துடன் எறும்பு கூட்டம் நின்றுவிட்டது. அந்த இடத்தில் சுவாமி, சுயம்புவாக தோன்றினார். அதை எடுத்து வந்து பிரதிஷ்டை செய்து இந்த கோவிலை கட்டி முடித்தார்.

1967ம் ஆண்டு வரை கோபுரம் இல்லாமல் இருந்தது. 1990ம் ஆண்டு 9 அடுக்குகளுடன், 180 அடி உயரத்தில் கலை வேலைப் பாடுகளுடன் கட்டி முடிக்கப்பட்டு, கம்பீரமாக தோற்றமளிக்கின்றது. கோபுரத்தின் 9 கோணங்களிலிருந்தும் வீதியை காணும் அமைப்பும், அகலமான வீதியும், சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்திலிருந்தும் சுவாமியைக் காணும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

9வது அடுக்கில் ஒரு பால்கனி கட்டப்பட்டு அதிலிருந்து பார்த்தால் பச்சைப்பசேல் என்ற சுற்றுப்புறம் காண்பதற்கு ரம்மியமாய் உள்ளது. இக்கோவில் திரிகூட மலையின் அடிவாரத்தில் உள்ளது. (மூன்று மலைகள் சேர்ந்து இருப்பதால் திரிகூடம் என்று அழைக்கப் படுகிறது). சுயம்புவான ஈசனார் லிங்க வடிவத்தில் கிழக்கு நோக்கி ருக்கிறார். அருகில் பார்வதி தேவி உலகம்மனாக இருக்கிறார்.உடன் பாலசுப்ரமணியரும் உள்ளார்.



அழகுராஜா

### திருமணம் கைகூடும், புத்திரபாக்கியம் கிட்டும்

நெல்லை தென்காசி மாவட்டத் தில் உள்ள சிவபக்தர்கள், தங்கள் குடும்பங்களின் நடக்கும் அனைத்து சுப காரியங் களுக்கும் இங்கு

வந்து காசி விஸ்வநாதரை வணங்கி, ஆசி பெற்று செல்கின்றனர்.

அதனால் வாழ்க்கை வளம் பெறும், தொழில் வளம் உயரும், ஆரோக்கியம் பெருகும், வேலை வாய்ப்பு தேடுபவர்களுக்கு உகந்த வேலை கிட்டும், திருமணம் கை கூடும், புத்திரபாக்கியம் தருவார், இல்லற வாழ்க்கையில் நிம்மதி வந்து சேரும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை.

இங்கு ஈஸ்வரனுக்கும், அன்னைக்கும் வஸ்திர வழிபாடு செய்து ஆராதிக்கின்றனர். மிகவும் அபூர்வமாக எல்லா தலங்களிலும், தெற்கு நோக்கி இருக்கும் துர்க்கா தேவி இங்கு மேற்கு நோக்கி இருக்கிறாா். நாரதர், அகத்தியர், மிருகண்டு முனிவர், இந்திரன், வாலி, நந்தி ஆகியோர் வழிபட்ட தலம் என்கின்றனர்.

மூன்று முக்கிய காரணங் ளுக்காக இத்தலம் கீர்த்தி பெற்றது. பூர்வஜன்ம பாவங்கள் நீங்குதல், தோஷ நிவர்த்தி, புத்திர பாக்கியம் பெறுதல் ஆகியவைகள் ஆகும்.

தீர்த்த குளங்களாக, காசி தீர்த்தம், சித்திர குளம், அன்னபூரணி தீர்த்தம், ஆனந்த தீர்த்தம் ஆகிய 4 தீர்த்தங்கள் இருக்கின்றது. சிற்றாறு நீர், கங்கைக்கு ஒப்பான சக்தி வாய்ந்ததாகும்.

இந்த கோவிலின் தல விருக்ஷம் செண்பக மரம். இங்குள்ள சிற்பங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை என்று கூறப்படுகின்றது. குறிப்பாக, இரட்டை சிற்பங்களாகிய வீரபத்திரன்வீரபாகு, இரண்டு தாண்டவ மூர்த்திகள், இரண்டு தமிழ் அன்னைகள், ரதி மன்மதன் ஆகியவைகளும் மிகவும் நேர்த்தியான மஹாவிஷ்ணு, கம்பீரமான காளி தேவி அனைத்தும் வியக்கத்தக்க சிற்ப வேலைப்பாடுகள் கொண்டவைகள் ஆகும்.

மதுரை நகரைப் போன்று, இந்த கோவிலைச்




சுற்றிலும் பல கோவில்கள் இருக்கின்றன. மேற்கு பிரகாரத்தில் மூலை விநாயகர் வெகு அழகாய் அமர்ந்து அருள் தருகிறார்.

பஞ்சலிங்க அய்யனார், மஹாலஷ்மி, சந்தன மாரீஸ்வரர், நடராஜ பெருமான், சண்டீஸ்வரர் ஆகியோருக்கும் சன்னதிகள் உள்ளது. அர்த்த மண்டபம், மணிமண்டபம், பஞ்ச பாண்டவர் மண்டபம், மஹா மண்டபம், இசை எழுப்பும் கல் தூண் மண்டபம் ஆகியவைகளும், பராக்கிரம பாண்டியன் சுவாமியை வணங்குவது போன்ற தத்ரூபமான சிலைகளும் காண்போரை வியக்க வைக்கும். இக்கோவில் சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் பெரியதாக உள்ளது.

இந்த தலத்தில் மாசி மகம், நவராத்திரி, திருக் கல்யாணம், ஐப்பசி மாதத்திலும், தெப்பத்திருவிழா ஆவணி மாதம் மூல நட்சத்திரத்திலும், பத்ர திருவிழா தை அமாவாசை அன்றும் மிகுந்த உற்சாகத்தோடு கொண்டாடப்படுகிறது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182




ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
.காம்
FREE
170 e-books
1000–க்கணக்கான
ஆன்மிக செய்திகள்
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...
eBook
FREE DOWNLOAD
யாகத்தால் மழை வருமா?
முட்டாள்தனமான கேள்விக்கு
அறிவியல் ரீதியான விளக்கம்
aanmeegamalar.com
HAPPY
PONGAL
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி

e-magazine
aanmeegamalar.com



பொதுவாக நாம் கர்மா தத்துவத்தை தவறாகப் புரிந்து கொள்கிறோம். அதாவது நமக்கு ஏற்படக்கூடிய துன்பங்களுக்கு காரணம் மற்றவர்கள்தான் என்று மற்றவர்கள் மீது எளிதாக பழியை போட்டு விடுகிறோம். அதாவது நாம் ஏதாவது ஒரு கிரகத்தின் மீது ஏதாவதொரு தோஷத்தின் மீது சூழ்நிலையின் மீது பழியைப்போட்டு விடுகிறோம். எடுத்துக்காட்டாக ஒருவர் பிரச்சனையின் காரணமாக மற்றொருவரிடம் உணர்ச்சி மிகுதியில் அவரைப் பற்றி தவறாகப் பேசிவிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஒரு காலக்கட்டத்தில் தான் பேசியது தவறு என்று உணர்ந்தவுடன் சம்பந்தப்பட்டவரிடம் ‘எனக்கு அஷ்டமத்து சனி நடந்து கொண்டிருப்பதால் அதனால் உங்களைத் தவறாகப் பேசி விட்டேன். உங்களிடம் தவறாக நடந்துகொண்டேன்’ என்று சனி யின்மீது பழியைப் போட்டு விடுகிறோம். அதாவது அவன் மற்றவர்களிடம் தவறாக நடந்து கொண்டதற்கு அவன் செய்த பாவ புண்ணிய கர்மாக்கள்தான் என்று அவன் உணர்வதில்லை. அவன் பாவ புண்ணியங்களைப் பற்றி அப்போது நினைத்துக்கூட பார்ப்பது இல்லை.

கர்மா தத்துவம் என்ன கூறுகிறது என்றால் நீ செய்த பாவங்கள் புண்ணிய கர்மாவினால் மனதளவில், உடலளவில் துயரமோ இன்பத்தையோ அனுபவிக்கிறாய். சிலபேர் ‘எனக்குத் தெரிந்து நான் எந்தவிதமான பாவமும் செய்யவில்லை. எனக்கு ஏன் இப்படி துன்பமும் துயரமும் மனக்கலக்கமும் வருகிறது’ என்று கூறி புலம்புவதைக் கேட்டிருப்போம். அவ்வாறு அவர்கள் கூறுவதிலிருந்து அவர்களுக்கும் தெரியாமல் பாவ கர்மாக்கள் செய்திருக்க வேண்டும் என்பதை யாரும் மனதில் எண்ணுவதில்லை.

உலகில் காணும் இன்பம் துன்பங்களை நாம் அனுபவிக்கும்போது இன்ப துன்பங்களுக்கு காரணம் நாம்தான் என்று பொறுப்பை உணர்ந்து இன்ப துன்பங்களை மனம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கர்ம தத்துவம் கூறுகிறது. அவ்வாறு பொறுப்பை மனித மனம் ஏற்றுக் கொள்ளும்போது அவன் அனுபவிக்கும் கஷ்டங்களை துயங்களை துயரங்களாக எண்ணாமல் அவற்றை ஒரு தவமாக மேற்கொள்ள முடிகிறது. அவ்வாறு துன்பங்களை கஷ்டங்களை நாம் தவமாக ஏற்றுக் கொள்வதால், அதாவது நமது கஷ்டங்களுக்கு நாம்தான் பொறுப்பு என்று தவமாக ஏற்றுக்கொள்ளும்போது மன அமைதி கிடைக்கிறது. மேலும் எதிர்காலத்தில் நமக்கு மனதளவில், உடலளவில் வரக்கூடிய கஷ்டங்களை எதிர்கொள்ளவும் மனம் பக்குவமடைந்து விடுகிறது. பொதுவாக நமது மனம் கஷ்டங்களைப் பற்றி நினைத்துக்கொண்டே இருக்கும்போது மனம் மிகவும் கஷ்டநிலையை அடைந்து துன்பநிலைக்குச் செல்கிறது.

அவரவர் செய்யும் புண்ணிய பாவங்கள் கர்மா பலன்களை அவரவர்கள்தான் அனுபவிக்க வேண்டும் என்று நமது பொறுப்பு பற்றி கர்மா தத்துவம் கூறுகிறது. அதாவது நிகழ்காலத்தில் நீங்கள் வாழ்ந்துகொண்டிருப்பதற்கும் எதிர்காலத்தில் நீங்கள் வாழ்வதற்கும் நீங்கள்தான் பொறுப்பு என்ற தத்துவத்தை கர்மா தத்துவம்

76

கூறுகிறது. இந்த புண்ணிய பாவ கர்மா பலன்களை மற்றவருக்கு மாற்ற முடியாது. எடுத்துக்காட்டாக ஒருவர் லக்கேஜ் எடுத்து வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். கொஞ்ச தூரம் வந்தவுடன் அவரால் லக்கேஜை சுமந்து வரமுடியவில்லையென்றால் அதை மற்றவரிடம் கூறி எடுத்து வரச் சொல்லலாம். ஆனால் மனிதர்கள் செய்த பாவ புண்ணிய கர்மா பலன்களை லக்கேஜைப்போல் தன்னுடைய துயரங்களை துன்பங்களை மனக்கஷ்டங்களை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது.

எடுத்துக்காட்டாக ஒருவன் வயிற்று வலியினால் துடிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன்தான் அந்த வயிற்று வலியை பொறுத்துக்கொள்வதோடு அதனை அனுபவவிக்க வேண்டும். அதற்கு மாறாக வயிற்று வலியை மற்றவனுக்கு மாற்றித்தரவோ அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவோ அவனால் முடியாது. அவனுடைய வயிற்று வலியை மற்றவருக்கு மாற்ற முடியாது. அதேபோன்று அவனவன் செய்த பாவ புண்ணிய கர்மா பலன்களை மற்றவர்களுக்கு மாற்றித் தர முடியாது என்று கர்மா தத்துவம் கூறுகிறது.

நம்முடைய துன்பங்களுக்கு நாம்தான் காரணம் என்ற பொறுப்பினை உணர்த்தக் கூடிய தத்துவம் கர்ம தத்துவம் ஆகும். அதாவது நாம் அனுபவவிக்கும் துன்பங்களுக்கு நாம்தான் காரணம் என்று எண்ணி மனதை பக்குவநிலைக்கு கொண்டு வருவதாகும். அதாவது மனிதர்களுக்கு நடக்கும் நிகழ்வுகளுக்கு அவன்தான் பொறுப்பு அதேபோல் எதிர்காலத்தில் நடக்கும் இன்ப துன்பங்களுக்கும் அவன்தான் பொறுப்பு என்று கர்மா தத்துவம் கூறுகிறது.

ஒரு மனிதன் எப்போது ஆன்மீக வழியில் வருகிறான் என்றால் தனக்கு ஏற்படக்கூடிய அல்லது தான் அனுபவவிக்கிற துன்பம் துயரங்களுக்குக் காரணம் மற்றவர்களோ, சூழ்நிலையோ காரணமில்லை. அதற்கு நாம்தான் காரணம் என்ற பொறுப்பு உணர்வு ஒருவனுக்கு எப்போது வருகிறதோ அப்போது அவன் ஆன்மீக வழியில் வந்து விட்டான் என்று கருத வேண்டும். அதாவது தன்னை தனக்கு வரக்கூடிய துன்பங்களுக்கு தான்தான் என்று கர்மா தத்துவத்தை புரிந்து செயல்படும்போது அவன் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண்கிறான். அவன் மன அமைதியையும் பெறுகிறான்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

நாம் யாரையும் மாற்ற முடியாது. அதாவது யாருடைய குணத்தையும் மாற்றவோ அவர்கள் செயல்பாடுகளை மாற்றவோ முடியாது. நாம் நம்மை மாற்றிக் கொள்ள முடியும். நான் புத்திமதி கூறித்தான் அவன் செயல்பாடுகள் குணங்கள் எல்லாம் மாறியது என்று சிலர் பெருமையாகக் கூறிக் கொள்வார்கள். இது தவறான கருத்தாகும். நாம் கூறும் கருத்தை ஒருவன் ஏற்றுக் கொள்கிறான் என்றால், அவனுக்கு நாம் கூறிய கருத்துக்களை அவன் விரும்பியதால்தான் அதனை ஏற்றுக்கொண்டான். நாம் கூறும் கருத்துக்களை அவன் விரும்ப வில்லையானால் நமது கருத்தை அவன் ஏற்றுக்கொள்வதில்லை. இதிலிருந்து நாம் என்ன உணர்ந்து கொள்ள வேண்டும் என்றால் ஒருவன் தன்னைத்தானே மாற் றிக் கொள்ள முடியும். மற்றவர்களை யாரும் மாற்றுவதற்கு முடியாது. இது கர்ம தத்துவத் தின் பலன் என்று சாஸ்திரம் கூறுகிறது.

சமுதாயத்தில் வாழும் நாம் தர்மம் அதர்மம் பற்றி தெளிவாகவும் சரியாகவும் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது நாம் தர்மத்தை பற்றி என்ன நினைக்கிறோம் என்றால் உண்மை பேசுபவனால் சுகமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ முடியாது. ஏமாற்றி பிழைப்பவனுக்குத்தான் நல்வாழ்வு வாழ முடியும். இந்த முடிவுக்கு அவன் வருவதற்குக் காரணம் அவன் ஒரு சில நேரங்களில் உண்மை பேசியிருப்பான். அதனால் அவன் வாழ்வில் பாவ புண்ணிய கர்மாவினால் கஷ்டப்பட்டிருப்பான். அவன் தான் பெற்ற அனுபவத்தை கருத்தில்கொண்டு உண்மை பேசுவதற்கு இது காலம் இல்லை என்று தவறான முடிவுக்கு அவன் வந்து விடுகிறான். மனிதன் பாவ புண்ணிய கர்மா தத்துவத்தை பற்றி நினைத்துக்கூட அப்போது பார்ப்பதில்லை.

மனிதனுக்கு தர்மத்தின் மீது ஒரு நம்பிக்கை வரவேண்டுமானால் இந்த கர்ம தத்துவத்தை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். ஒருவன் தர்மத்தின் மீது நம்பிக்கை இழக்கிறான்

e-magazine
aanmeegamalar.com

என்றால் நம் கண் முன்னால் ஒருவன் அதர்மத்தின் வழியில் சென்று மகிழ்ச்சியான சொகுசான வாழ்க்கையை அனுபவவித்துக் கொண்டிருக்கிறான்என்று வைத்துக் கொள்வோம். அவன் அதர்ம வழியில் சென்று அவன் செய்யும் தவறுக்கும் தண்டனையை உடனே நாம் பார்க்க முடியாது. இதனை உலகில் நாம் சர்வ சாதாரணமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஒருவன் தவறுகள் மீது தவறாக செயல்பட்டு அதர்மத்தின் வழியில் நடந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு பொன்னும் பொருளும் பேரும் புகழும் வசதியான வாழ்க் கையும் கிடைக்கிறது.அதனால் கவலையில் லாமல் மகிழ்ச்சியாக இருக்கிறான். அவ னைப் பார்த்தவர்கள் அவனைப்போல் பொன்னும் பொருளும் சேர்த்து சுகம் பெற வேண்டும் என்று விரும்புகிறான். அவன் அதர்மத்தின் வழியில் செல்வதற்கு முடிவு செய்து கொள்கிறான். அதனால் அவன் தர்மத்தின் மீது உள்ள நம்பிக்கையை இழந்து விடுகிறான்.

மற்றொரு காரணம் அவனுக்கு கஷ்டத் தின்மீது கஷ்டமாக வந்து, அதனை அனுபவித் துக் கொண்டிருக்கிறான். பட்ட காலிலே படும் என்று கூறுவதுபோல் கஷ்டங்கள் அவனை விடாமல் துரத்துகிறது. அவன் எந்த சூழ்நிலையிலும் பொய் சொல்லி இருக்க மாட்டான். அவன் யாரையும் பொய் சொல்லி ஏமாற்றியும் இருக்க மாட்டான். தர்மத்தின் நிலைதான் என்ன? என்று யோசிக்க ஆரம்பிக்கிறான்.

ஒருவன் நம் கண்ணுக்கு எதிரே அதர்ம வழியில் சென்று சுகத்தை மகிழ்ச்சியை அனுபவவிக்கிறான் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறோம். அப்படிபட்டவன் சுகமாக வாழ்வதைப் பார்த்தவுடன் நாம் தர்மத்தின் மீது உள்ள நம்பிக்கையை இழக்கிறோம். இதனை நாம் சிந்தித்துப் பார்த்தால் அவன் அதர்ம வழியில் நடந்தாலும் அவன் இன்பத்துக்கு காரணம் அவன் எந்த ஜென்மத்திலோ இந்த ஜென்மத்தின் ஆரம்பித்திலோ ஏதோ புண்ணிய கர்மா செய்திருப்பதால் அவன் இப்போது அதர்ம வழியில் சென்றாலும் தர்மத்தின் பலனை அவன் சொகுசான வாழ்க்கையை அனுபவவிக்கிறான். அவன் சொகுசான வாழ்க்கையை எதுவரை அனுபவிப்பான் என்றால் , அவன் முன் ஜன்மத்தில் செய்த புண்ணிய கர்ம பலன்கள் தீரும் வரை அனுபவிப்பான். அதன் பிறகு அவன் இப்போது அதர்ம வழியில் நடக்கும் செயலுக்குரிய பாவ கர்மா பலன்களை அவன் வாழ்வில் அனுபவவிக்க நேரிடும் என்பதை மனதில் எண்ணிக்கொள்ள வேண்டும்.

அவன் செய்யும் அதர்மத்தின் காரணமாக இன்பத்தை அனுபவிக்கிறான் என்று நாம் தவறாக எண்ணிக் கொள்கிறோம். ஆனால் சாஸ்திரம் என்ன கூறுகிறது என்றால் இப்போது அதர்ம வழியில் சென்றாலும் அவன் என்றோ செய்த புண்ணியத்தின் கர்ம பலனை இப்போது மகிழ்ச்சியாக அனுபவவிக்கிறான். அவன் என்றோ செய்த புண்ணிய பலன்கள் அவனுக்கு முடிந்த பிறகு அவன் இப்போது அதர்ம வழியில் சென்ற பாவ கர்மா பலன்களை அனுபவவிப்பான் என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது.

அதேபோல் ஒருவன் தர்மத்தின் வழியில் நடந்தாலும் அவன் கஷ்டங்களை அனுபவவிக்கிறான். காரணம் அவன் முன் ஜென்மத்தில் செய்த பாவ கர்மாக்களை இப்போது தர்ம வழியில் நடந்தாலும் அவன் அனுபவவிக்கிறான். அவனது பாவ கர்மா பலன்கள் முடிந்த பிறகு அவன் இப்போது தர்மத்தின் வழியில் சென்ற புண்ணியப் பலன்களை அனுபவவிக்க ஆரம்பித்து விடுவான். இதனை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டால் தர்மம் நமக்கு இன்பம் மகிழ்ச்சியைக் கொடுக்கும் அதர்மம் துன்பத்தைக் கொடுக்கும் என்று நினைத்து மன அமைதி அடைவான். ஒருவன் அதர்மத்தின் காரணமாக சுகத்தை அனுபவவிக்கவில்லை. தர்மவழிதான் அவனுக்கு இன்பத்தைக் கொடுக்கும்..

அதாவது இப்போது அதர்மத்தின் காரணமாக துன்பத்தை அனுபவிக்காமல் இன்பத்தை சுகத்தை அனுபவிக்கிறான் என்றால் அவன் முன் ஜென்மத்தில் செய்த தர்மத்தின் பலன்களை இப்போது அனுபவிக்கிறான் என்று சாஸ்திரம் கூறுகிறது.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

## ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

**ஆன்மிக சேவை புரியும் அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்... உங்கள் சேவைக்கு எங்களால் ஆன எளிய உதவி செய்யப்படும்**

ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

வாட்சப் எண்: 9444228203